குரல். 07

# கோசம்

மூன்றாம் காலாண்டு - 2012



எமது

# கோசம்...

இவ்வருடத்தின் மூன்றாவது கோசமாக இவ்விதழ் வெளிவருகின்றது. வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பெண்களுக்கெதிராக இடம்பெறும் பிரச்சினைகளை பெரிதும் வெளிப்படுத்துவதாக இவ்விதழ் அமைகின்றது. அந்தவகையில் தற்காலத்தில் இராணுவமயமாக்கலுடன் இடம்பெறும் பல விடயங்கள் பெண்களைப் பெரிதும் பாதிக்கின்றன. வடகிழக்குப் பகுதியில் யுத்தத்தின் பின்னர் மக்கள் மத்தியில் அச்சத்தைத் தோற்றுவிக்கும் விடயமாக பெரும்பான்மை மதத்தின் அத்துமீறிய பிரவேசம் அமைகின்றது. குறிப்பாக யுத்தம் இடம்பெற்ற பகுதிகளில் இராணுவத்தினர் திட்டமிட்டு பௌதமத சின்னங்களையும், விகாரைகளையும் அமைக்கின்றனர். ஏற்கனவே இருந்த இந்து, முஸ்லிம் வணக்க ஸ்தலங்களில் அத்துமீறிப் புத்தர் சிலைகளை நிறுவுகின்றனர். இது நாட்டில் பரவலாக இடம்பெறுகின்றது. அண்மையில் இடம்பெற்ற தம்புள்ளை முஸ்லிம் பள்ளி விவகாரம் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். தமிழ் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற இடங்களில் இந்த வருட வெசாக் கொண்டாட்டமானது வலிந்து திணிக்கப்படடிருந்தது. யாழ்ப்பாணக் காவல் நிலையங்களில் கூட வெசாக் அலங்காரங்கள் இடம்பெற்றிருந்தன. இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் காவல்துறையானது பௌத மதத்தையே பிரதிபலிக்கின்றது என்ற கருத்தையே வெளிப்படுத்தி உள்ளது. ஏனெனில் இந்துக் கொண்டாட்டங்களோ அல்லது இஸ்லாமியக் கொண்டாட்டங்களோ இடம்பெறும் வேளைகளில் இவ்வாறான அலங்கரிப்புகள் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றிருக்கவில்லை. காவல்துறையானது அனைத்து மக்களுக்கும் பொதுவான ஒரு அமைப்பு. ஆனால் பெரும்பான்மை மதமானது சிறுபான்மையினரிடத்தில் தனது அத்துமீறலை பல விடயங்களூடாக வெளிப்படுத்தி வருகின்றது. அந்தவகையில் வடகிழக்குப் பகுதியில் வாழ்கின்ற பலர் தமது அதிருப்தியை சென்ற கோசத்திலும் வெளியிட்டிருந்தனர். இம்முறையும் அதுதொடர்பான விடயங்கள் உள்ளடக்கப்படுகின்றன.

அதுமட்டுமன்றி யுத்தகாலம் தொடக்கம் அண்மைக்காலம் வரை காணாமல் போன அல்லது கடத்தப்பட்டோர் தொடர்பான கேள்விகள் அரசாங்கத்தை நோக்கிக் கேட்கப்படுகின்றன. அதற்கான பதில் இதுவரை வழங்கப்படாத சூழலில் இன்றும் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் என்பன இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்விடயம் தொடர்பாக சர்வதேசமும் அவ்வப்போது அரசாங்கத்திடம் கேள்விகளை எழுப்புகின்றது. இருப்பினும் பொறுப்பான பதிலை இதுவரை அரசு வழங்காதது மட்டுமன்றி, அண்மையில் அமைச்சர் நிமால் ஸ்ரீ பாலடி சில்வா அவர்கள் "காணாமல் போனோர் பற்றிய மேற்குலகத்தின் பிரசாரம் அடிப்படையற்றது" என்றும் கூறியுள்ளார்.

ஆகவே, இத்தருணத்தில் நாமும் எமது இம்முறை இதழில் காணாமல் போனோர், கடத்தப்பட்டோர் தொடர்பான விடயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளோம். ஏனெனில் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் இடம்பெறும் உள மற்றும் பொருளாதாரச் சிக்கல் நிலையென்பது பாரிய பிரச்சினைகளாக உள்ளன. அதனை நாம் இவ்வாக்கங்களூடாக விளங்கிக் கொள்ளலாம். ஏனெனில் அவ்வாறான குடும்பங்களில் பெண்களே பாரிய பொருளாதார உள நெருக்கடியினை எதிர்கொண்டு வருகின்றனர். இது வெளியே பலருக்கும் தெரிவதில்லை. என்பதும் குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் தற்காலத் தேவையை உணர்ந்து இம்முறை கோசமானது இராணுவமயமாக்கம், காணாமல் போனோர் மற்றும் கடத்தப்பட்டோர் தொடர்பான விடயங்களில் அதிக கவனம் செலுத்தியுள்ளமையைக் காணலாம். இது வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பெண்கள் எதிர்கொள்கின்ற மிக முக்கியமான பிரச்சினைகளாகும்.

***ஆசிரியை***



எங்கே எம்மவர்? 2



அதிகரித்து வருகின்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் . . . 4



பௌதமத விஸ்தரிப்பும் காணி சுவீகரிப்பும் 7



காணாமல் போனோர் குடும்பங்களும், பொருளாதாரமும்... 17



மன்னார் முறுகல் நிலை 22

ISSN: 2012-8933

**ஆசிரியை**
குகநிதி குணச்சந்திரன்

**வெளியீடு**
பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு

**அட்டைப்படம்**
பிஸ்லியா பூட்டோ

**கேலிச் சித்திரங்கள்**
மாணவர் சிலரது குழுச் செயற்பாடு

**வெளியீடு**
பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு
8/3, 202, டபிள்யூ. ஏ. சில்வா மாவத்தை
கொழும்பு 06, இலங்கை.

**Women Action Network**
8/3, 202 , W.A. Silva Mawathe, Colombo 06,
Sri Lanka. Email: tmwn2010@gmail.com

# எங்கே எம்மவர்?


புகைப்படம் - பிலிப்லியா

> “இராணுவத்தால் கொண்டு செல்லப்பட்டவர்கள் மூன்று வருடங்களாகியும் விடுதலை செய்யப்படவும் இல்லை, அவர்கள் உயிரோடு இருக்கிறார்களா? அல்லது இல்லையா? என்ற தகவலும் இல்லை. அப்படியாயின் அவர்கள் இறந்து விட்டார்கள் அல்லது கொலை செய்யப்பட்டுவிட்டார்கள் என்ற முடிவை மட்டும் தான் எம்மால் எடுக்க முடியும்.”

காணாமல் போனோர் மற்றும் கடத்திச் செல்லப்பட்டோருக்கான விடுதலைக்காகவும், அவர்களின் ஆரோக்கியத்திற்காகவும், மேலும் தவறிழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்திற்காகவும் 18.05.2012 அன்று வடக்குக் கிழக்கு மாவட்டங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட பெண்கள் அவர்களின் உறவினர்களுக்காக கோயில்களில் பிரார்த்தனைகளும் பூசைகளும் செய்தனர். ஆனால் இதில் கவலைக்குரிய விடயம் யாதெனில் கோயில்களில் பெண்கள் அவர்களின் சோகங்களை படைத்தவனிடம் கூறி கண்ணீர் விட்டு அழமுடியாத நிலை காணப்பட்டது. காரணம் இராணுவத்தினர் மற்றும் இரகசிய பொலிஸார் ஆகியோரின் நடவடிக்கைகளேயாகும். அன்றைய தினம் எம் அன்னையரால் கோயில் வாயில்களில் வீசி எறியப்பட்ட தேங்காய்கள் ஒவ்வொன்றும் சொல்லும் அவர்களின் சோகங்களையும் கண்ணீரின் அவல நிலைகளையும்.

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்து இற்றைக்கு மூன்று வருடங்கள் ஆகின்றன. ஆனால் யுத்தம் முடிவடைந்து இத்தனை வருடங்கள் சென்றும் வடக்கு கிழக்கில் உள்ள பெண்களின் உறவினர்களை, சந்தேகத்தின் பேரில் கைது செய்கின்றனர். மூன்று வருடங்கள் பூர்த்தியாகியும் சரணடைந்தோர் நிலை என்னவென்று இதுவரை காலமும் பதில் தேடமுடியாத புரியாத புதிராகவே உள்ளது. விடைகள் தேட முடியாத இந்த வினாக்களுக்கு பதில் கொடுப்பது யார்?

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் பிரகாரம் ஒருவரது ஞாபகார்த்த தினத்தைக் கொண்டாடுவதற்கு உரிமை இருகின்றது என்றால், 18.05.2012 அன்று காணமால் போனோரை ஞாபகப்படுத்தும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பூஜையிலும் வழிபாடுகளிலும் மறைமுகமாக ஏன் அரசாங்கத் தலையீடுகள் இருக்க வேண்டும்? அப்படியாயின் எமது மக்களுக்கு உரிமைகள் இன்னும் வழங்கப்படவில்லை என்பதை அரசாங்கம் பகிரங்கமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். ஞாபகார்த்த பூஜையில் கலந்து கொண்ட தாய் ஒருவர் தனது மகனின் புகைப்படத்தை கையில் ஏந்தியவாறு கோயிலில் “எனது மகனைத் திருப்பிக் கொடுத்து விடு. இல்லையே என்னையும் அவனிடம் கொண்டு போய் விடு” என்று புலம்பியவாறு தேங்காயை உடைத்துக் கோயிலை வலம் வந்தார்.

கைது செய்யப்பட்டவர்கள் முறையின்றியும் தக்க காரணமின்றியும் கைது செய்யப்பட்டுள்ளனர். வரலாற்றுப் பதிவுகளில் சில: (யுத்த காலம் மற்றும் யுத்தம் முடிவடைந்து சில காலங்களில் பதிவானவை)

01) சாவகச்சேரிப் பகுதியில் கிணறு தோண்டிக் கொண்டிருந்த ஐந்து இளம் வாலிபர்கள் காணமல் போயினர். அயலில் யாரையோ தேடிக் கொண்டு வந்த இராணுவம் அவர்களைக் காணாதபடியால் இவர்களைக் கொண்டு சென்றது.

02) செம்மணி பரந்த பற்றைக் காட்டில் நூற்றுக்கணக்கான காணமல்போன இளைஞர்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. காரணம் செம்மணி பிரதேசத்தில் முன் பகுதிகளை தோண்டிய போது இரண்டு உடல்கள் தோண்டி எடுக்கப்பட்டன.

03) மேலும் கொடிகாமப் பகுதிகளில் கைது செய்யப்பட்டவர்கள் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர். பாடசாலையில் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டவர்களின் அலறல்கள் அயலில் உள்ளவர்களுக்கும் கேட்டுள்ளது. ஒரு தாய் கூறியதாவது தனது மகன் உதவிகோரி கூக்குரல்

இட்டதை அவர் தன் காதால் கேட்டிருக்கிறார். ஆனால் தற்போது அவரும் அங்கு இல்லை.

உரிமை மீறியவர்கள் சட்டத்தின் பிடியில் அகப்படவுமில்லை. ஆயிரக்கணக்கான அப்பாவிகள் கைது செய்யப்பட்டு காலவரையரையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மேலும் சித்திரவதைக்கும், பாலியல் வல்லுறவுக்கும் உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டு அவர்களது உடல்கள் அழிக்கப்பட்டும் உள்ளது. ஆனால் இவற்றைப் பற்றி எவ்வித தகவலும் இல்லை, எவ்வித பதிவுகளும் வைக்கப்படவும் இல்லை. காணாமல் போனோரில் பெரும்பாலானோர் குடும்பத் தலைவர்களே. இதனால் வேறு வழியின்றி குடும்பத்தினர் தம்மிடமிருந்த சொத்துக்களை விற்கத் தலைப்பட்டனர். இதன் காரணமாக தனிப்பட்ட நபர்கள் தமது ஊக்கத்தையும் ஆர்வத்தையும் இழந்தனர். அத்துடன் குடும்பத்தினதும் சமூகத்தினதும் ஒருங்கிணைந்த பிணைப்பு உடைந்து நொருங்கியது.
குடும்பத்தலைவர்களை இழந்தும் உறவினர்களாலும் ஒதுக்கப்பட்ட பெண்களே தமது குடும்ப நிலை தொடர்பாக உடல், உளரீதியாக பாடுபட வேண்டியுள்ளது. உதவியை யார் செய்வார்கள் என்று அவர்கள் ஏங்கி நிற்கின்றார்கள். இறுதியாக தன் கையே தனக்குதவி என்று குடும்பச் சுமையை பொறுப்பேற்று சமுதாயத்தின் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் சுயமாகத் தொழில் புரிந்தும் தம் பிள்ளைகளை பராமரிப்பதோடு கடத்திச் செல்லப்பட்ட அல்லது தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட அவர்களது கணவர்மார்களையோ மற்றும் உறவினர்களையோ தேடித்தேடி தேய்ந்து போய்விட்டன எமது பெண்களின் கால்கள்.

இராணுவத்தால் கொண்டு செல்லப்பட்டவர்கள் மூன்று வருடங்களாகியும் விடுதலை செய்யப்படவும் இல்லை, அவர்கள் உயிரோடு இருக்கிறார்களா? அல்லது இல்லையா? என்ற தகவலும் இல்லை. அப்படியாயின் அவர்கள் இறந்து விட்டார்கள் அல்லது கொலை செய்யப்பட்டுவிட்டார்கள் என்ற முடிவை மட்டும் தான் எம்மால் எடுக்க முடியும்.

இவர்களின் இந்த இழப்பை ஈடு செய்ய வேண்டிய கடமை யாருக்கு உள்ளது? பாதிக்கப்பட்ட பலருக்கு மீண்டு வர எவ்வித ஏற்பாடுகளுமில்லை, பலர் மன அழுத்தத்திற்கு உட்பட்டுள்ளனர். சிலர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். சிலர் சருகாகிப் போய்விட்டனர். பெண்கள் சம்பந்தப்பட்ட சமூகத்தில் சீர்த்திருத்தங்களுக்கு முக்கிய தேவை உள்ளது. இத்தகைய கொடும் செயல்களை உலகில் உலவ விடுவது மனித சமுதாயத்திற்கே பெரும் இழுக்கு. ஆனால் இது தொடர்பாக எமது சமுதாயம் இதுவரை என்ன செயற்பாட்டில் இறங்கியிருக்கின்றது? காவல்துறை, மனித உரிமைகள் தொடர்பாக பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் பாதுகாவலர்களும் என்ன சாதிக்கின்றனர்? போலி சாமியார்களின் ஊழல்களையும் அவர்களின் வேசத்தையும் வெளிச்சம் போடவும், கள்வனின் காதலி எனப் பெண்களின் அந்தரங்க விடயங்களையே ஊடகங்களும் பெரிதுபடுத்துகின்றன.

தாய் நாடு என்கிறார்கள், தாய் மொழி என்கிறார்கள், இயற்கையையும் சக்தியையும் பெண்ணாகவே கருதுகிறார்களாம்... ஆனால், பிறப்பால் ஆண்களுடன் இருக்கும் எம்மை பெண்ணாக மனிதாபிமானத்துடன் மதிக்கிறார்களா? எமது கணவருக்காக, பிள்ளைகளுக்காக, உறவினர்களுக்காக சிந்தித்தால் கூட நாங்கள் குற்றவாளிகளா? இப்படிப்பட்ட கொடூரமான செயல்களையும் கொலைக் குற்றங்களையும் மௌனமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்போமேயானால் நாங்களும் குற்றவாளிகள் ஆகின்றோம்.

இருப்பினும், இவ்வாறான நிகழ்வுகளைப் பார்த்துக் கொண்டிருக்க நாங்கள் கோழைகள் இல்லை! பல பெண்கள் தைரியசாலிகள்தான். அவர்கள் வாழ்க்கையைக் கொண்டு நடத்தும் தீர்மானத்துடன் உள்ளனர். ஆனால் அவர்களுக்கு உதவி செய்யக்கூடியவர்கள் யார்? சமூகம் அல்லது அரசாங்கம் அல்லது இரு சாராருமா? இவர்களுக்குப் பணம் தேவை, பாதுகாப்புத் தேவை, உழைப்பிற்குரிய ஆதாயம் தேவை, அத்துடன் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் தேவை. இருப்பினும் இவை அனைத்தும் இவர்களுக்கு "பிச்சையாக" வழங்கப்படக் கூடாது. அவை அவர்களது அடிப்படைத் தேவைகள். அவற்றை அரசு பூர்த்தி செய்து கொடுத்தல் வேண்டும். மேலும் கட்டாயமாக மருத்துவ, உளவியல் உதவிகளும் சமூக உதவிகளும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வேண்டும். எந்தவொரு சூழ்நிலையிலும் காணாமற்போனமைக்கான நட்டஈட்டை வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும். ஒருவர் காணாமற் போனமையினால் ஏற்பட்ட துயரங்களைக் குறைப்பதற்கு சகல முயற்சிகளும் விரைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

பாதிக்கப்பட்ட குடும்பத்தினரால் இறுதியாகக் கூறப்பட்டது "அவர்கள் உள்ளார்களா? மரணித்துவிட்டனரா? எனக் கூறிவிடுங்கள். நாங்கள் அவர்களுக்குச் செய்ய வேண்டிய சமயச் சடங்குகளை நிறைவேற்றிவிட்டு எமது நாளாந்த வாழ்க்கையில் ஈடுபடுகின்றோம். நாங்கள் உண்மையாக வாழ்வதற்கு எமக்கு ஆதரவு தந்து இடமளியுங்கள்" என்பதேயாகும். இதில் இருந்து விடுபடுவதற்குப் பெண்கள் தைரியமாகவும் துணிச்சலாகவும் எச்சரிக்கையான உணர்வுடனும் செயல்ப்படுவது தான் மாற்று மருந்தாக அமையும்.

*பிஸ்லியா பூட்டோ*

# அதிகரித்து வருகின்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் குடும்பங்களில் இல்லாமையும்



http://jdsrilanka.blogspot.com/2010_07_17_archive.html

இலங்கையில் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்ற வாழ்க்கைச் செலவு தொடர்பாக மக்கள், எதிர்க்கட்சியினர், ஊடகங்கள் உட்படப் பலரும் தமது விசனத்தைத் தெரிவிக்கின்றனர். இருந்த போதிலும் அரசாங்கம் அது தொடர்பாக எவ்வித அக்கறையும் இன்றி அலட்சியமாக இருப்பதாகவே அதனது தொடர் செயற்பாடுகள் தெளிவுறுத்துகின்றன. ஏனெனில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை அடிக்கடி விலையேற்றம் செய்வதன் ஊடாக நாட்டில் பலரும் வருமானப் பற்றாக்குறையை எதிர்கொள்கின்றனர். சித்திரை மாதத்தின் நடுப்பகுதியில் கோதுமை மாவினது விலையானது 8 ரூபா 50 சதத்தினால் உயர்த்தப்பட்டது. இதனால் ஏற்கனவே 71 ரூபாவாக கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்யப்பட்ட கோதுமை மா 79 ரூபா 50 சதமாக உயர்த்தப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி 04.05.2012 தொடக்கம் இறக்கமதி செய்யப்படுகின்ற பால்மாவானது 400g 63 ரூபாவினாலும், 1Kg பால்மா 163 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. சமையல் எரிவாயுவின் விலை 12.5Kg 350 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போது மீண்டும் கோதுமை மா 4 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. கோதுமை மா விலையேற்றத்தால் பாண் உட்பட பல வகையான உணவுப் பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளன. தற்போது ஒரு இறாத்தல் பாண் 60 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது.

**“ யுத்தம் பெருமளவில் பெண்களையும், குழந்தைகளையுமே இன்று தனிமையாக்கியுள்ளது. அவ்வாறிருக்கும் போது, வாழ்வாதாரம் அழிக்கப்பட்டு, வேலை வாய்ப்பின்றி சிறிய சிறிய கூலி வேலைகளைச் செய்து வாழ்கின்ற பெண் தலைமைதாங்கும் குடும்பங்களது நிலை பற்றிக் கூற வேண்டியதில்லை. ”**

அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பிற்கு காரணமாக முன்பு யுத்தம் கூறப்பட்டு வந்தது. நாட்டின் பாதுகாப்புச் செலவினைக் காரணம் காட்டி அரசாங்கம் கூறிய விளக்கமானது தற்போது அவசியமற்ற ஒன்றாகி விட்டது. இருந்த போதிலும் யுத்தத்தின் பின்னரான மீள் அபிவிருத்தி, வேலை வாய்ப்பு என்பன மந்த கதியான வேகத்தில் செல்கின்ற போதிலே இவ்வாறான விலையேற்றம் நாட்டில் வறுமை மற்றும் போசாக்கின்மையையே கொண்டு வரும். ஏனெனில் பால்மா, கோதுமை மா என்பன குழந்தைகள் உள்ள

வீட்டில் அதிகளவில் செலவாகும் பொருட்களாகும். அவ்வாறு இருக்கும் போது இரண்டு, மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகள் சிறுவர்கள் இருக்கின்ற குடும்பங்களில் பங்கீடு என்பது மட்டுப்படுத்தப்பட்டதாகவே அமையும். பொதுவாகவே பெண்கள் தம்மைக் கவனிக்காது தமது குழந்தைகளிலேயே அக்கறை கொண்டு அவர்களுக்கு போதிய உணவை வழங்கித் தமது உணவை மட்டுப்படுத்துபவர்களாக இருப்பது யதார்த்தமான ஒன்றாகும். இது பெண்கள் போசாக்கின்மையை அனுபவிக்க ஓர் உண்மையான காரணமாகும். அதுமட்டுமன்றி நாட்டில் அதிகளவு வருவாயைப் பெற்றுத் தருகின்ற மலையகத்தில் வாழ்கின்ற மக்கள் தமது உணவில் கோதுமை மாவினையே அதிகளவில் சேர்த்துக் கொள்கின்றனர். அவ்வாறிருக்கும் போது அப்பகுதி மக்களைச் சிறிதும் கருத்தில் கொள்ளாது குறிப்பிட்ட பொருட்களின் விலையை அதிகரிப்பதனால் அங்கு வாழ்கின்ற மக்களும் அவர்களிலே குறிப்பாகப் பெண்களின் நிலை பற்றி சிந்திக்க வேண்டியுள்ளது. இதனடிப்படையில் தற்போது அரசாங்கத்தால் தினமும் அதிகரிக்கப்படுகின்ற உணவுப் பொருட்களின் விலையேற்றம் காரணமாக பெண்கள் மற்றும் சிறுவர்களே அதிகம் போசாக்கின்மையை எதிர்கொள்வார்கள்.

திட்டமிட்டு அரசாங்கம் அத்தியாவசியப் பொருட்களினை விலையேற்றுகின்ற அதேவேளை நாட்டிலே படித்துப் பல்கலைக்கழகம் சென்று வெளியேறிய வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்குவதற்கு முன்வருவதில்லை. பல்கலைக் கழகம் சென்று பட்டம் பெற்று வெளியேறிய எத்தனையோ பேர் வேலையின்றியும், கிடைக்கும் வேலையைக் குடும்ப நலனைக் கருத்தில் கொண்டும் செய்து வருகின்றனர். இவர்கள் பலரும் தற்காலிக வேலைகளைச் செய்தே குடும்பங்களின் வறுமையைப் போக்குவதற்குப் போராடிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அரசாங்கமோ இன்னமும் போட்டிப் பரீட்சை மூலமும், பயிற்சிகள் மூலமும் பட்டதாரிகளின் எண்ணிக்கையை மிகச் சொற்பமாக ஆக்கிக் கொண்டு நியமனங்களை வழங்குகின்றது. தற்போது கூட நாடு முழுவதும் உள்ள பட்டதாரிகளுக்கு மாதம் 10,000 ரூபா கொடுப்பனவை மட்டுமே வழங்கி ஒரு வருடகாலத்திற்கு பயிற்சி என்ற பெயரில் காலம் கடத்துகின்றது. இவர்களது நியமனம் இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை. இது தவிர ஏனைய துறைசார்ந்தவர்கள் மற்றும் ஏற்கனவே அரச நியமனத்தில் இருப்போருக்குக் கூட வருமானத்தை அதிகரிப்பதற்கு அரசு உத்தேசிக்கவில்லை. அவர்களது வருமானத்தினைக் கொண்டு குடும்பங்களில் மிகச் சொற்பமான அளவு விடயங்களையே பூர்த்தி செய்யக் கூடியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலதிக கொடுப்பனவுகள், போக்குவரத்துக் கொடுப்பனவு போன்றவற்றில் பெரும் இறுக்கம் நிலவி வருகின்றது. வடக்குக் கிழக்கைப் பொறுத்தவரை யுத்த காலத்தில் இடம்பெற்ற உயிர் அழிவு மற்றும் பொருளழிவுகளில் இருந்து இன்னமும் மீளாத சிறுபான்மைச் சமூகமானது இவ்வாறு அடிக்கடி உயர்ந்து கொண்டே செல்கின்ற அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தால் திணறுகின்றதை அரசாங்கம் கருத்தில் கொள்ளவில்லை. அத்தோடு வடக்குக் கிழக்கு இளைஞர், யுவதிகள் பெருமளவில் அரச உத்தியோகத்தை மட்டுமே நம்பி உள்ளார்கள். ஏனெனில் அங்கு கொழும்பு மற்றும் பிற பகுதிகளைப் போன்று தனியார் துறையில் வேலை வாய்ப்புப் பெறுவது குறைவு. அதற்கான வசதிகளும் அங்கு அருகியே காணப்படுகின்றன. இந்த வேளையில் அரசாங்கமானது வேலை வாய்ப்பு வழங்குவதில் கூட பாரிய இழுத்தடிப்புகளை மேற்கொள்கின்றது. போதிய வருமானத்தை வழங்கி விட்டு பொருட்களை விலை உயர்த்துவதால் யாருக்கும் எந்தவித பாதிப்பும் வந்துவிடாது. ஆனால் வருமானப் பற்றாக்குறை, வேலை வாய்ப்பு, அகதி முகாம் வாழ்க்கை, மீள்குடியேற்றத் தாமதம், இருப்பிடங்கள் அபகரிப்பு போன்ற பல்வேறு காரணங்களை நிறைவு செய்யாது அத்தியாவசியப் பொருட்களை தினம் தினம் உயர்த்துவதால் சாதாரணமாக உழைத்து வாழ முற்படுகின்ற மக்களது நிலை கவலைக்கிடமானது. இதுமட்டுமன்றி இன்னமும் முகாம்களில் சொற்ப நிவாரணத்தை நம்பும் மக்களுக்கு தமது குழந்தைகளுக்குத் தேவையான ஓரிரண்டு அவசியமான பொருட்களைக் கூட விலை கொடுத்து வாங்க முடியாத சூழலே இன்று நிலவுகின்றது. யுத்தம் பெருமளவில் பெண்களையும், குழந்தைகளையுமே இன்று தனிமையாக்கியுள்ளது. அவ்வாறிருக்கும் போது, வாழ்வாதாரம் அழிக்கப்பட்டு, வேலை வாய்ப்பின்றி சிறிய சிறிய கூலி வேலைகளைச் செய்து வாழ்கின்ற பெண் தலைமைதாங்கும் குடும்பங்களது நிலை பற்றிக் கூற வேண்டியதில்லை. அதுமட்டுமன்றி இராணுவமானது தமது பாதுகாப்பைக் காரணம் காட்டி வடக்குக் கிழக்கில் சிறுபான்மைச் சமூகத்தின் குடியிருப்புகள், தொழில்வளம் மிக்க இடங்கள் போன்றவற்றை அபகரித்து வருகின்றது. அவ்வாறு அபகரிக்கப்படுகின்ற இடங்களில் செய்யக் கூடிய தொழில்களைத் தாமே செய்து வருகின்றனர்.

அம்பாறை அஷ்ரப் நகரில் உள்ள மக்களை வலுக்கட்டாயமாக விரட்டிய பின்னர் அவர்கள் செய்து வந்த வேளாண்மை மற்றும் சேனைப் பயிர்ச் செய்கையைத் தாம் செய்து வருகின்றனர். அதேபோல மன்னார் மாவட்டத்திற்குட்பட்ட சிலாவத்துறைப் பகுதியியைத் தமதாக்கிக் கொண்டு அப்பிரதேச மக்கள் செய்து வந்த மீன்பிடித் தொழிலைக் கடற்படையினர்


**“சாதாரண மக்களது அன்றாடத் தொழில்களையெல்லாம் இராணுவமானது தாம் செய்வதோடு மட்டுமல்லாது மக்களது வாழிடங்களையும் தம்வசம் வைத்திருப்பதால் பொது மக்களது வாழ்க்கை எப்படி சுபீட்சமடையும்? யுத்த வெற்றியால் மட்டும் எல்லோரும் நிம்மதியுடன் வாழ்ந்து விட முடியாது என்பதை அண்மைக்கால நிகழ்வுகள் படம் பிடித்துக் காட்டுகின்றன.”**

அவர்களே செய்கின்றனர். யுத்தம் இடம்பெறாத முள்ளிக் குளம் போன்ற பகுதிகளைத் தம் வசம் வைத்துள்ள இராணுவமானது மக்களது வாழ்வாதாரத் தொழில்களைத் (விவசாயம்) தாமே செய்து வருகின்றனர். இன்றுவரை முள்ளிக்குள மக்கள் தற்காலிகத் தங்குமிடங்களில் மற்றும் தெரிந்தோர் காணிகளில் குடியிருந்து வருகின்றனர். தாமே தொழில் உபகரணங்களைக் கொண்டு கடற்றொழிலை மேற்கொண்டு வந்த மக்கள் இன்று கூலிக்கு மீன் பிடிக்கச் சென்று சொற்ப சம்பளத்தைப் பெற்று வருகின்றனர். இவ்வாறு யுத்தம் இடம்பெற்ற பகுதிகளிலும் மற்றும் இடம்பெறாத பகுதிகளிலும், மீள் குடியேற்றப் பக்கங்களிலும் இராணுவமானது மக்களது தொழில்களைத் தமது கைகளில் நேரடியாகவும் மறைமுகமாகவும் எடுத்து நடாத்துகின்றது. வன்னிப் பகுதியில் குறிப்பாக A9 வீதியோரத்தில் உணவுச் சாலைகளை அமைத்து யாழ்ப்பாணத்திற்கு வருகின்ற பயணிகளது உணவுத் தேவைகளை தாம் நிறைவு செய்கின்றனர். இதனால் ஏற்கனவே யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொழில் ரீதியிலும் பெரும் தாக்கத்தை இராணுவம் செலுத்தி வருகின்றது. நாட்டில் பல பகுதிகளில் இராணுவம் மரக்கறி விற்பனையிலும் ஈடுபடுகின்றது. கிழக்குப் பகுதியை எடுத்தால் திருகோணமலை மாவட்டத்தின் பல பகுதிகளில் கடற்கரையோர உல்லாசப் பயணிகளின் வருகையைக் கருத்தில் கொண்டு அப்பகுதியில் உள்ள மக்களது காணிகளை வலுக்கட்டாயமாகவும், பயமுறுத்தியும் விற்கச் செய்கின்ற போக்குக் காணப்படுகின்றது. அவற்றில் உணவுச் சாலைகள், விடுதிகள் என்பவற்றை முன்னாள் இராணுவ உத்தியோகத்தர்கள் நடாத்தி வருகின்றனர். உல்லாசத்துறையோடு தொடர்புபட்ட படகோட்டுதல், விடுதிப் பராமரிப்பு, உணவு தயாரிப்பு, பரிமாற்றம் போன்ற பலவகையான தொழில்களை அவர்களே செய்வதனால் சிறுபான்மை இனத்தோருக்கு அவர்களது பிரதேசங்களிலேயே தொழில் வாய்ப்பின்றிப் போகின்றது. இவற்றைக் கொண்டு பார்க்கும் போது சாதாரண மக்களது அன்றாடத் தொழில்களையெல்லாம் இராணுவமானது தாம் செய்வதோடு மட்டுமல்லாது மக்களது வாழிடங்களையும் தம்வசம் வைத்திருப்பதால் பொது மக்களது வாழ்க்கை எப்படி சுபீட்சமடையும்? யுத்த வெற்றியால் மட்டும் எல்லோரும் நிம்மதியுடன் வாழ்ந்து விட முடியாது என்பதை அண்மைக்கால நிகழ்வுகள் படம் பிடித்துக் காட்டுகின்றன. வாழ்க்கையை வாழ்வதற்கு உணவு, உடை, உறையுள், தொழில் உட்பட்ட அடிப்படைத் தேவைகள் இன்று பறிபோய்க் கொண்டிருக்கின்றன. இதுவரை காலமும் நாட்டினை சின்னா பின்னமாக்கிய யுத்தத்தினைக் காரணம் காட்டி இனிவரும் காலத்தில் மக்களது வாழ்வாதாரத்தை மற்றும் வாழிடங்களை அத்துமீறி அபகரித்தல், உணவுப் பொருட்களின் விலைகளை அதிகரித்தல் போன்ற செயற்பாடுகளைச் செய்து வருவதால் வறுமைப்பட்டோர் எண்ணிக்கை அதிகரிப்பதோடு போசாக்கின்மை மற்றும் நோய்த் தாக்கத்தை எமது சந்ததி எதிர்கொள்ள நேரிடும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை

**அமுதா**



# பௌத்தமத விஸ்தரிப்பும் காணி சுவீகரிப்பும்



வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் யுத்த காலங்களுக்குப் பின்னரான காலப்பகுதியில் அபிவிருத்தி என்ற போர்வையில் மத விஸ்தரிப்புகளும் அதனை ஒட்டிய காணி சுவீகரிப்புகளும் நடைபெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது. இது திட்டமிட்டு சிறுபான்மையினரின் சமய கலாசார விழுமியங்களை சிதைவடையச் செய்யும் நோக்கிலே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

யுத்தத்தினாலும் அனர்த்தங்களினாலும் பெரிதும் பாதிக்கப்பட்ட மக்கள் உடல், உறவுகளை, உடமைகளை, சொத்துக்களை இழந்து உளரீதியான தாக்கங்களுடன் எஞ்சிய உறவுகளோடும் பிரிந்த நினைவுகளோடும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு அமைதியைத்தரும் இடமாகவும், தமது குறைகளைப் பயமின்றியும் தடையின்றியும் சொல்லி அழுவதற்கு உரிய இடமாகவும் காணப்படுவது கடவுளின் சன்னிதானமேயாகும்.இன்று அவ்வாறான தலங்கள் அழிக்கப்பட்டும் சிதைக்கப்பட்டும் வருகின்றது. அது மாத்திரமின்றி அழிக்கப்படுகின்ற இடங்களில் புதிதான பௌத்தமத சிலைகளும், தலங்களும் உருவாகின்றன. அதனைத் தொடர்ந்து அத்தலங்களைச் சுற்றி புதிதான குடியேற்றங்கள் நடைபெறுகின்றன. அதற்காகத் தமிழ்பேசும் மக்களின் காணிகள் இரையாகின்றன. இச்செயற்பாடுகள் மக்களினால் ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு நாகரீகமற்ற செயற்பாடாகக் காணப்படுகின்றது. இதனால் பெரிதும் பாதிக்கப்படுவது பெண்களும் சிறுவர்களுமேயாகும். அவர்கள் சுதந்திரமாக சமய தலங்களை வழிபடவோ, பேணிப் பாதுகாக்கவோ முடியாமல் உள்ளது. அதாவது பாதுகாப்பற்ற சூழல் நிலவுகின்றது. கோயில்களை அண்மித்த பகுதிகளில் பெண்கள் ஈடுபட்டு வருகின்ற சுய தொழில்களில் தடை ஏற்படுகின்றது. இதனால் பெண் தலைமைத்துவக் குடும்பங்களைக் கொண்ட குடும்பங்கள் வேறு ஒருவரின் கீழ் தங்கி வாழும் நிலைக்குத் தள்ளப்படுகின்றன. இதனால் பலவாறான பாதுகாப்பற்ற சூழலுக்கும், சுரண்டலுக்கும் பெண்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

அதுமாத்திரமின்றி இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் செயற்பாடுகள் தோன்றுகின்றன. மக்கள் மத்தியில் எப்போதும் நிம்மதியின்றி அச்சத்தினை ஏற்படுத்துகின்றது. இவ்வாறான செயற்பாடுகளைத் திட்டமிட்டு செய்பவர்கள் ஒருபுறம் இருக்க, அப்பகுதியில் இவ்வளவு காலமும் சேர்ந்து வாழ்கின்ற மக்களுக்கிடையில் மனக்கசப்புகளும், முரண்பாடுகளும் ஏற்படுவதற்கு வழிவகுக்கின்றது. பெண்கள் பலர் தமது கணவன்

மற்றும் உறவுகளை இழந்த நிலையிலும் கூடத் தாம் பாவித்துப் பராமரித்து வந்த வளங்கள் இல்லாமலும் அவை துண்டாடப்படுவதுமாக இருப்பதால் மன உளைச்சலில் அல்லல்படுகின்றனர்.

இதனால் பெண்கள் தமது சொந்தக் காணிகளை இழந்து ஏனையவர்களுடன் தங்கி வாழும் நிலையில் உள்ளனர். அத்தோடு இடைதங்கல் முகாமில் இருந்து சொந்த இடத்திற்குச் செல்ல முடியாமை காணப்படுகின்றது. இடைத்தங்கல் முகாம்களிலும் அவர்களுக்கு வளங்கப்பட்டு வந்த அடிப்படை வசதிகள் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் பெண்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எந்த மதமாக இருந்தாலும் மக்கள் கூடி வாழ்கின்ற இடத்தில் தமக்கென ஒரு வழிபாட்டுத் தலம் தேவை என்பதை உணர்ந்து மக்களாகவே இணைந்து தமது வழிபாடடிற்குரிய கடவுளுக்கு ஆலயம் அமைத்து வழிபட்டு வருவதுதான் காலங் காலமாக நடைபெற்று வருகின்றது. அந்த நிலை மாற்றங்கண்டு தற்போது, குறிப்பிட்ட இன, மொழி, மதத்தைப் பின்பற்றிய மக்களே இல்லாத இடத்தில் வேறு ஒரு இனத்திற்குச் சொந்தமான சமய தலங்களை அமைத்து விட்டு அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்று புதிதாக குடியேற்றம் செய்வதும் மக்களின் விருப்பு இன்றி அவர்கள் காணிக்குள்ளே அதிகாரங்களைப் பயன்படுத்தி இவ்வாறான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது எந்த வகையில் நியாயமானது?





இது சிறுபான்மையின சமூகத்தின் சமூக, சமய, கலாசார விழுமியங்களை இந்நாட்டு அரசு மதிக்காத தன்மையையும், சிதைவடையச் செய்யும் நோக்கத்தையும் வெளிப்படையாகவே காட்டுகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக கீழே குறிப்பிடப்படும் இடங்கள் ஆதாரமாக உள்ளன.

- திருகோணமலை பிரதான பஸ் தரிப்பிடத்திற்கு முன்னால் சட்ட ரீதியற்ற முறையில் புத்தர் சிலை வைக்கப்பட்டமை.
- திருகோணமலை ஈச்சிலம்பற்றுப் பிரதேசத்தில் இலங்கைத்துறை முகத்துவாரம் என்ற தமிழ் மக்கள் செறிந்து வாழும் இடம் இன்று லங்காப் பட்டுண எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி அந்த இடத்தில் தமிழ் மக்களால் பெரிய சுவாமி கோவில் என்று அழைக்கப்பட்டு வழிபட்டு வந்த தலத்தில் தற்போது பாரியளவிலான புத்தர் சிலையுடன் கூடிய பெரிய விகாரை அமைக்கப்பட்டுள்ளது.
- தமிழ், முஸ்லிம் மக்கள் வாழும் பிரதேசமான மூதூர் 3ஆம் கட்டை, மலையடி வாரத்தில் இரவோடு இரவாக புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ளது.
- கிண்ணியாவில் முஸ்லிம் மக்கள் வாழ்ந்த கருமலை ஊற்று என்ற கிராமம் மிகவும் பழமை வாய்ந்தது. அங்கிருந்த மக்களின் வணக்க ஸ்தலமாகிய பள்ளி ஒன்றினை இருந்த இடம் தெரியாது இல்லாது செய்து விட்டு அதனைக் கடற்படையினர் தமது குளிக்கும் இடமாக பயன்படுத்துகின்றனர்.
- தமிழ் மக்களின் வரலாற்று புகழ் மிக்க இடமான கன்னியா நீர் ஊற்றில் உள்ள பிள்ளையார் கோயிலின் சிலையை அகற்றிவிட்டுப் புத்தர் சிலை வைக்கப்பட்டதோடு, அப்பகுதியை இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் உட்படுத்தியுள்ளமை. அதேபோல் அங்கு இருந்த பழமை வாய்ந்த புனித பள்ளி ஒன்றிற்கும் தற்போது மக்கள் சென்று தொழுகையில் ஈடுபட முடியாத நிலை உள்ளது.







- மட்டக்களப்பில் பழமை வாய்ந்த தாண்டான்வெளி முருகன் கோயிலிலும் தற்போது பிரச்சினை நடைபெற்று வருகின்றது. மலைகள் இருக்கும் இடமெல்லாம் புத்தர் சிலை அமைக்கப்பட வேண்டும் என்றும், அங்குள்ள முருகன் சிலையை எடுக்கும் படி அறிவிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

- திருகோணமலை நகரத்தில் உள்ள வரலாற்றுப் புகழ் மிக்க வீரசக்தி பிள்ளையார் கோயில் தற்போது இராணுவத்தினரின் குளிக்கும் இடமாக மாறியுள்ளது. அக்காணிக்கான உறுதிப் பத்திரங்கள் இருந்தும், நீதிமன்றத்தினால் அது கோயில் காணி என்று தீர்ப்பு வழங்கியும் இதுவரைக்கும் அக்காணியை இராணுவம் விடவில்லை. இக்கோயில் வீதியில் புதிய சிங்களக் குடியேற்றங்களும் நடைபெற்றுள்ளன.

- திருகோணமலை டொக்யா ரோட்டில் உள்ள தமிழ் பேசும் ஒருவரின் காணிக்குள் அரசமரம் ஒன்று நின்ற காரணத்திற்காக அது தமது பௌத விகாரைக்குரியது என்றும், அத்தோடு பாதுகாப்பு வலயம் என்ற பெயரிலும் அக்காணி சுற்றி அடைக்கப்பட்டுள்ளது.

- திருகோணமலை லேபர் ரோட்டில் உள்ள கிருஷ்ணர் கோயிலை விரைவில் அகற்றுமாறு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

- முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் இடமாகிய கிண்ணியாவில் உள்ள உள்நுழைவு வரவேற்புப் பதாதை அமைப்பது தற்போது தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. காரணம் பௌத்த சின்னத்தை அதில் வரையுமாறும் இல்லாவிட்டால் அதனை அமைக்க வேண்டாம் என்ற நிபந்தனையிலேயே தடுக்கப்பட்டுள்ளது.

- அம்பாறை மாவட்டம் திருக்கோயில் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட சங்கமன்கண்டி கிராமத்தில் அமைந்துள்ள சங்கமன் கண்டி மலை முருகன் கோயில் கட்டிடப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் அதனை உடன் நிறுத்துமாறு அரசினால் கட்டளையிடப்பட்டுள்ளது.



- மட்டகளப்பில் குடும்பிமலைப் பிள்ளையார் கோயில் அகற்றப்பட்டு புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது.

## வடக்கு

- மல்லாவி வடக்கில் கனகராயன் குளம் என்ற இடத்தில் பிரதான வீதியில் இருந்த பிள்ளையார் கோயிலை எடுத்து விட்டு புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது.

- தமிழ் மக்கள் மாதிரம் வாழும் ஒலுமடு சந்தி மாங்குளம் என்ற இடத்தில் புதிதாக பௌத்த ஆலயம் நிர்மானிக்கப்பட்டு உள்ளது.

- பரந்தன் சந்தியில் இருந்து மேற்கு பக்கம் குமரபுரம் செல்லும் சந்தியில் பௌத்த சமயத் தலம் அமைக்கப்பட்டுள்ளது.

- கிளிநொச்சி (கரடி போக்குச் சந்தி) நகரில் பௌத்த விகாரை அமைக்கப்பட்டுள்ளமை.

***கட்டுரை மற்றும் படங்கள் : இதயா***



http://dbsjeyaraj.com/dbsj/archives/6048

# "களிமண் வண்டி"
## நாடக அளிக்கை கூறுவது என்ன?

*"பழைய எண்ணக்கருக்களின் மரபுகளின் சுவரினை உடைத்தெறிந்து விட்டு அதனைக் கடந்து வரும் பொழுதே காத்திரமான கலை மேன்மையடைகிறது".*

இது கடந்த மாசி 16 ஆம் திகதி மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கை நிறுவனத்தில் மேடையேற்றப்பட்ட "களிமண் வண்டி" எனப்படும் அளிக்கையில் வழங்கப்பட்ட கையேட்டில் காணப்பட்ட வரிகளையே மேலே கூறப்பட்டுள்ளது.

இரண்டேகால் மணி நேரம் ஆற்றப்பட்ட அந்த அளிக்கையில் 50 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் முழுமையான ஈடுபாட்டுடனும், அர்ப்பணிப்புடனும் தம்மை ஈடுபடுத்தியிருந்தனர். இதில் நடித்தவர்கள் நெறியாளரால் எதிர்பார்க்கப்பட்ட வகையில் தமது பாத்திரங்களை இயன்றளவு சிறப்பாக வழங்கியிருந்தனர். அதிலும் சிலர் இதுவரை எமது சமூகங்களில் பலரும் ஏற்கத் தயங்கும் சவாலான பாத்திரங்களில் கூடத் துணிவுடன் நடித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

மரபுசார் எண்ணக்கருக்களான சாதியம், பால்நிலை போன்ற கருத்தியல்களுக்கு எதிராகச் செயற்பட்டு வருபவர்களுக்கும் இன இணக்கம், சமாதானம் போன்றவற்றில் நம்பிக்கை கொண்டவர்களுக்கும் மேலே கூறப்பட்ட கூற்றும் இரு இன இளையோரின் கூட்டுருவாக்கம் எனும் செய்தியும் பலத்த எதிர்பார்ப்புகளைத் தோற்றுவித்திருந்தது. ஆனால் அன்று நிகழ்த்தப்பட்ட அளிக்கையோ இந்தக் கூற்றுக்கு எந்த வகையிலும் சம்பந்தப்படாததாக எமது சமூகங்களிலிருந்து என்றோ கைவிடப்பட்ட மரபையும், பலமிழந்து வரும் பால்நிலைக் கருத்துகளையும் மீள வலியுறுத்தவதாக அமைந்திருந்தது.

**பழைய சித்தாந்தங்கள், மரபுகளுள் ஆண்கள் நாங்கள் சிறைப்படமாட்டோம், ஆயின் பெண்களை சிறைப்படுத்துவோம்.**

திருமணமாகிக் குழந்தையுமுள்ள, வறுமையில் வீழ்ந்த உயர்குடி வர்த்தகனான சாருதத்தனுக்கும் பாலியல் தொழிலைக் குலத்தொழிலாகக் கொண்ட குடும்பத்தில் வந்த வசந்தசேனை என்கின்ற பெண்ணுக்கும் இடையிலான திருமணத்துக்கப்பாலான தொடர்பை மையப்படுத்திய கி.பி 300-400 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மிருச்சகடிகம் எனும் நாடகத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த அளிக்கை 'களிமண் வண்டி' என்ற பெயரில் தயாரிக்கப்பட்டிருந்தது. இதிகாசங்கள், புராணங்கள் முதல் இன்றைய இந்திய சினிமாக்கள் வரை கூறப்படும் அதே நல்லவனும் - கெட்டவனும், இவர்களை நல்லவனாகவோ,

கெட்டவனாகவோ காட்டத் தேவையான ஒரு பெண் பாத்திரமும் கொண்ட கதை.

எந்தவிதமான வியாக்கியானங்களும் இன்றி கதாநாயகனை நல்லவனிலும் நல்லவனாகவும், கதாநாயகியை சிருங்கார ரசம் சொட்டும் வழக்கமான சினிமா வரையறைகளுக்குட்பட்ட மயிலாய் நடந்து கிளியாய்ப் பேசும் 'பாவை'யாகவும், இவள் மீது காதல் கொள்ளும் இன்னொருவனைக் கெட்டவனான வில்லனாகவும், கதாநாயகனின் நண்பனை நகைச்சுவைப் பாத்திரமாகவும் படைத்து, இவை எல்லாவற்றிலும் கேவலமான பாத்திரமாகத் தனக்குத் துரோகம் புரியும் கணவனுக்கு ஒத்தாசை புரியும் 'நற்பெண்'ணாக மனைவி பாத்திரத்தை ஒரு உயிர்ப்பற்ற பாத்திரமாகவும் 'களிமண் வண்டி' கொடுத்திருந்தது.

மரபுகளின் சுவரை உடைத்து எழுந்த கலைப்படைப்பாக எதிர்பார்க்கப்பட்ட இந்தப் படைப்பானது கலை வடிவத்திலும் புது வடிவமாக இன்றி தமிழ் சினிமா ஒன்றின் மேடை வடிவமாக இருக்க, கருத்தியலிலாவது ஏதாவது சமூகத்துக்குப் பாதகமான கருத்தியல்களை உடைத்திருந்ததா என்றால் அதுவும் இல்லை.

வறுமையோ கல்வி அறிவின்மையோ சூழலின் அச்சமோ எதுவாயினும் அவற்றைத் தாண்டித் தமக்கெதிராக நிகழ்த்தப்பட்ட அநீதிகளுக்காகச் சலிக்காது போராடிய, போராடிக் கொண்டிருக்கும் நூற்றுக்கணக்கான பெண்கள் வாழும் பூமி இது. பெண்களையும் ஒடுக்கப்பட்டவர்களையும் கௌரவமான வாழ்வுக்குத் தகுதியற்றவர்களாகவும், உரிமையற்றவர்களாகவும் ஆக்கும் எல்லாவிதமான கருத்தியல்களையும் அவை நவீனமானவையோ மரபு சார்ந்தவையோ கேள்வி கேட்பதும் ஆரோக்கியமான வகையில் சமத்துவத்தை நோக்கிய மாற்றங்களைக் கொண்டு வருவதுமான செயற்பாடுகளில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பெண்களும், ஆண்களும் வருடக்கணக்காக ஈடுபட்டு வருகிறார்கள். முக்கியமாகப் பால்நிலை சமத்துவத்தை நோக்கிய செயற்பாடுகளும் இதன் மூலம் இம்மாவட்டத்திலுள்ள பல மட்டங்களில் நிகழ்ந்துள்ள சாதகமான மாற்றங்களும் ஏனைய பல மாவட்டங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்து வருகிறது.

பல மட்டத்திலுள்ளவர்களும் தமது செயற்பாடுகளில் பால்நிலை வேறுபாடுகளைத் தோற்றுவிக்கும் கருத்தியல்களைச் சமூக அக்கறையுடன் கவனமாகத் தவிர்த்து வரும் இம்மாவட்டத்தில் இம்மாற்றங்களுக்குப் பாதகமான இத்தகைய ஒரு அளிக்கையை பாரிய பொருள் மற்றும் கால செலவுடனும், இளம் தலைமுறையொன்றை ஈடுபடுத்தியும் தயாரித்ததானது கேள்விக்குரியதாகவே உள்ளது.

மட்டக்களப்பு மாவட்டம் மட்டுமன்றி முழு இலங்கையுமே சாதி, இன, பால்நிலை அடிப்படையிலான பாரபட்சங்களுக்கெதிரான பலவிதமான போராட்டங்களை வரலாற்று ரீதியாகக் கண்டு வந்துள்ளது. சாதி, இன, அடிப்படையில் எந்த சாராரையும் கீழ்மைப்படுத்தும் புண்படுத்தும் விதமான வார்த்தைப் பிரயோகங்களோ கருத்துகளோ தமது படைப்படைப்புகளில் வெளிப்படாதிருப்பதில் இலங்கையின் ஊடகங்களிலும் கலை வடிவங்களிலும் உள்ள அநேகமானவர்கள் கவனமாக நடந்து வருவது கண்கூடு.

ஆனால் இவற்றுள் பால்நிலை அடிப்படையில் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையிலான சமூகக் கட்டமைப்பின் பிரச்சினைகளைக் கவனமாகக் கையாள்வதில் இன்னமும் போதாமைகள் உள்ளன. ஊடகங்கள் இன்னமும் பால்நிலை உணர்திறனற்ற வகையில் பெண்களை இரண்டாம் பட்சமாகவும், புண்படுத்தும் வகையிலுமான விடயங்களை

**“ மரபுகளின் சுவரை உடைத்து எழுந்த கலைப்படைப்பாக எதிர்பார்க்கப்பட்ட இந்தப் படைப்பானது கலை வடிவத்திலும் புது வடிவமாக இன்றி தமிழ் சினிமா ஒன்றின் மேடை வடிவமாக இருக்க, கருத்தியலிலாவது ஏதாவது சமூகத்துக்குப் பாதகமான கருத்தியல்களை உடைத்திருந்ததா என்றால் அதுவும் இல்லை. ”**



http://dbsjeyaraj.com/dbsj/archives/6048

வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் அதேவேளை, தமிழ் நாடகத்துறையானது ஏனையோருக்கு முன்னுதாரணமாகத் திகழக் கூடிய பல சாதகமான மாற்றங்களைக் கண்டு வந்துள்ளது. பங்குபற்றுவோரிலிருந்து பார்வையாளர்கள் மற்றும் பரந்த சமூகம் வரையாக சமூக பண்பாட்டு நிலைமைகளில் தாக்கம் செலுத்தக் கூடிய வகையிலும் காலங்காலமாக நிலவி வரும் பாகுபாடுகளைக் கேள்வி கேட்பதாகவும் மாற்றங்களைச் செய்து காட்டுவதாகவும் நாடக செயற்பாடுகள் கடந்த சில தசாப்தங்களாக முன்னெடுக்கப்பட்டு வரும் எமது சூழலில் மீண்டும் பிற்போக்குத் தனமான ஒரு அளிக்கையைத் தயாரிக்க வேண்டிய தேவை என்ன?

அதிலும் நவீன நாடகங்களில் சாதி அடிப்படையிலான பாத்திரங்களை இயன்றளவு தவிர்த்தும் இன மத அடிப்படையிலான பாத்திரங்களைப் படைப்பதில் அதீத கவனத்துடனும் இருக்கும் நாடக நெறியாளர்கள் பெண்களது பாத்திரப் படைப்பின் போது மட்டும் தமது ஆணாதிக்க சிந்தனைகளிலிருந்து மீள முடியாதவர்களாக இருப்பதற்கு இந்த நாடகம் ஒர் உதாரணமாகும். முக்கியமாக சமூக மாற்றம், பால்நிலை சமத்துவம் சார்ந்த வட்டங்களில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நாடகவியளாளராக இருந்து வந்த பேராசிரியர் மௌனகுரு அவர்கள் இந்நாடகத்துக்கு நிறைவேற்று நெறியாளராக இருந்தும் இவ்வாறான ஒர் படைப்பு உருவாகியதென்பது அதிர்ச்சிக்குரிய விடயமாகும்.

நாடகக் கற்கைக்காக இதே பிற்போக்கான கதையைத்தான் மேடையேற்றியிருக்க வேண்டும் என்ற தேவை இருந்திருப்பினும் பெண்களைக் காட்சிப்பொருளாக, போகப் பொருளாக மேடை வெளியில் அலைய விட்டும், பெண் உடலைக் கேவலப்படுத்துவதாகவும், பெண்களின் பாலியல்பை அவமதிக்கும் சொற்பிரயோகங்களுமாக நாடகத்தை வடிவமைத்திருக்க வேண்டிய வரலாற்றுத் தேவை என்ன? இது நாடகத் தேவை கருதியதெனில் பெண் சார்ந்த இந்த ஆதிக் குலத் தொழிலை அன்றி வேறேதாவது ஆண்களால் செய்யப்பட்ட குலத்தொழில்களைப் பற்றியோ, சாதிப் பெயர்களையோ, சாதி அடிப்படையிலானதாகக் கூறப்படும் உடல் அசைவுகளையோ இவர்களால் இன்று மேடையில் காட்ட முடியுமா? கலையின் பெயரிலும், பழைய கதைகளை மீளச் செய்து பார்த்தல் என்பதன் பெயரிலும் எதனை மீள உருவாக்கப் போகிறார்கள். சிறு வயதுத் திருமணம், சதி (இறந்த கணவனுடன் பெண் உடன்கட்டை ஏறுதல்) என எத்தகைய பெண் விம்பத்தை இவர்கள் கொண்டாடப் போகிறார்கள்?

''*சிறு பிள்ளைத்தனமான சித்தாந்தங்கள், மரபுகள் மற்றும் பழைய மோடிமைகளுக்குள் சிறைப்பட்டுக் கடிகாரத்தை நிறுத்துவதற்கு அல்லது அதனைப் பின்னோக்கிச் சுற்றுவதற்கு நாம் முயற்சிக்க மாட்டோம்*''....என்ற வரிகளை நாடகத்தின் கையேட்டில் வாசித்துவிட்டு நாடகத்தைப் பார்த்த பொழுது ஒரு பெண்ணியவாதியாக எனக்கு இவ்வாறே தோன்றியது. சிறு பிள்ளைத்தனமான சித்தாந்தங்கள், மரபுகள் மற்றும் பழைய மோடிமைகளுக்குள் ஆண்களாகவும் தலைவர்களாகவும் நாம் சிறைப்படமாட்டோம். ஆனால் பெண்களையும், எங்களது வழிகாட்டலில் வரும் இளையோரையும் சிக்க வைப்போம்.

பெண்களுக்கு மட்டுமல்லாது ஆண்களுக்கும் முழுச் சமூகத்துக்குமே பாதகமான கருத்தியல்களையும், காட்சிப் படிமங்களையும் வகை தொகையற்றுப்பரப்பிக் கொண்டிருக்கும் தென்னிந்தியச் சினிமா மற்றும் தொலைக்காட்சித் தொடர்கள் போன்றவற்றின் மாயையிலிருந்து விடுபடப் போராடிக் கொண்டிருக்கும் எங்களுக்கு, எங்களுக்குள்ளிருந்தே இப்படியொரு படைப்புத் தேவையா?

மக்களுக்குத் தீங்கான மக்களாலேயே கைவிடப்பட்ட மரபுகள், கருத்தியல்களை மீளக் கொண்டு வருவதற்கு பாரிய பொருள், கால, மனித வளத்தைச் செலவழித்தது ஏன்? அதிலும் இதனை சமூக அக்கறையும் கலைத்திறனும் கொண்ட பராக்கிரம நீரி எல்ல, பேராசிரியர் மௌனகுரு போன்ற இரண்டு நெறியாளர்களும், சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கை நிறுவனம், இந்திய உயர் ஸ்தானிகர் காரியாலயம் ஆகிய சமூகப் பொறுப்புடைய இரண்டு பாரிய நிறுவனங்களும் இணைந்து முன்னெடுத்தது ஏன்? இன, மொழித் தடைகளைக் கடந்து அரங்க வெளியில் தாம் எடுத்துக் கொண்ட முயற்சியைச் சிறப்பாகச் செய்வதில் ஒன்றிணைந்து பாடுபட்ட இளம் தலைமுறையை இவர்கள் சரியாக வழி நடத்தியிருக்கலாம்.

**கமலா வாசுகி (வாசுகி ஜெயசங்கர்)**



# காணாமல் போகும் பெண்களும் மண்ணின் மைந்தர்களும்




http://www.bandwmag.com/galleries/bw/contests/3/categories/11/photographs/6958

பெண்மையும், மென்மையும்
அவர்கள் இலட்சணங்கள்
தாய்மை அவர்களது ஆபரணம்.

அவர்கள் பூவிலும் மெல்லிய
பூசிக்காதவர்கள்
அவர்கள் பெண்கள் அல்ல
தெய்வப் பிறவிகள்.
வானத்துள் உறையா
இவ்வையத்து தெய்வங்கள்.

மண்ணின் மைந்தர்களுக்கு
அல்லவா மனித உரிமைகள்
தெய்வப் பிறவிகளுக்கு எதற்கவை?
யாரிந்த மண்ணின் மைந்தர்கள்?

நோபல் பரிசு கிடைக்குமெனின்
நானே உலகில்
நாணம் பயிர்ப்பு
அச்சம், மடம் கொண்ட
ஆண் மகனாவேன் என்று
பணத்தாசை பிடித்தலையும்
உளத்தால் ஊனமுற்றோரா?

மனத்தால் வறுமையுற்ற
இம்மானிடர்கள்
தம்மைத் தாமே - இம்
மண்ணின் மைந்தர்களாய்
முடி சூடிக் கொண்டவர்கள்.

"பலவீனர்கள்" எனக் கூறி
அவர்களைக் கொண்டே
பலம் பெறும் இவர்களா
இம் மண்ணின் மைந்தர்கள்?

பெண்மையும் மென்மையும்
தாய்மையும் ஓர் புறம்
தீராத ஊழிக் கடனும்
தேவையாயின் திரவியம் தேடலும்
மறுபுறம்
பெண்களை மறைக்கும்
புதைகுழிகளாயின.

நாமிந்த உலகிற்கு
நரகத்துளல்லவா வந்து பிறந்துள்ளோம்?
புதை குழிகளில்
சாகாத பிணங்களாய்
சதா வாழவா வந்தோம்.

இல்லவேயில்லை
புதைகுழியிலிருந்து
புதிதாய்ப் பிறப்போம்
புதுமைகள் செய்வோம்.

பலவீனர்களல்ல,
பலத்தின் அடிப்படையே நாம்.
நாமே இம்மண்ணின் மாந்தர்கள்
என்பதைப் பிரகடனம் செய்வோம்.

---

***சுல்பிகா***
***நன்றி: விலங்கிடப்பட்ட மானிடம்***



# அடிப்படை உரிமைகள்

## ஏதேச்சையான கைதிலிருந்து சுதந்திரமாக இருப்பதற்கான உரிமை

ஏதேச்சையாக ஆளொருவரைக் கைது செய்யும் அதிகாரம் பொலிசிற்குக் கிடையாது.

ஆளொருவர் குற்றம் புரிந்திருக்கிறார் அல்லது புரிந்து கொண்டிருக்கிறார், அல்லது எவரேனும் ஆளுக்கெதிராக நியாயமான முறைப்பாடு செய்யும் பட்சத்தில் அல்லது குற்றம் புரிந்திருப்பதாக நியாயமான சந்தேகம் இருந்தால் கைது செய்யப்பட முடியும்.

கணவனுக்காக மனைவியையோ அல்லது பிள்ளைக்காகத் தாயையோ அல்லது தந்தையையோ கைது செய்யும் அதிகாரம் பொலிசிற்குக் கிடையாது.

பொலிஸ் அலுவலர் கைது செய்யும் போது கைதிற்கான காரணத்தை கைது செய்யப்பட்ட ஆளுக்கு அறிவிக்கக் கடப்பட்டவர். ஆள் ஒவ்வொருவரும் கைதிற்கான காரணத்தை அறிவதற்கான உரிமையைக் கொண்டுள்ளனர்.

நாட்டின் சாதாரண சட்டத்தின் கீழ் பொலிஸ் கட்டுக் காவலில் ஒருவரை வைத்திருக்கக் கூடிய ஆகக் கூடிய காலம் 24 மணித்தியாலங்கள் ஆகும். கைது செய்யப்பட்டவர் 24 மணித்தியாலங்கள் முடிவடையும் முன்னர் நீதவான் முன்பு கொண்டு வரப்படுதல் வேண்டும்.

ஒருவருக்கு காரணத்தை அறிவிக்காமல் அல்லது காரணமில்லாமல் கைது செய்வது, அல்லது பொலிஸ் தடுப்புக் காவலில் 24 மணித்தியாலங்களுக்கு மேல் வைத்திருப்பது அவரின் அடிப்படை உரிமையினை மீறிய செயலாகும்.

ஒருவர் பிடியாணையின் மீது கைது செய்யப்படும் போது, அவர் பிடியாணையைப் பார்ப்பதற்கு அல்லது அதன் பிரதியை எடுப்பதற்கு உரிமையுடையவர்.

பொலிஸ் அலுவலர் ஒவ்வொருவரும் சட்டத்திற்குக் கீழ்படியக் கட்டுப்பட்டவர்கள். சட்டத்திற்குக் கட்டுப்பட்ட பிரஜைகளைப் பாதுகாப்பது பொலிஸாரின் கடமையாகும். எவரும் பொலிசிற்குப் பயப்படத் தேவையில்லை.

பொலிஸ் அலுவலர் சிவில் உடையில் கைது செய்கின்ற போது பிரஜை ஒருவர் அவர்கள் பொலிஸ் அலுவலர்களா என்பதை அறிவதற்காக அவர்களின் அடையாள அட்டைகளைப் பரிசோதிக்கும் உரிமை உடையவர்.

கைது மேற்கொள்ளப்படும் போது எப்பொலிஸ் நிலையத்திலிருந்து வந்தனர், பெயர்கள், பதவிகள், அவர்களின் இலக்கங்கள், வாகனத்தின் பதிவு இலக்கம் என்பவற்றை எழுதிக் கொள்ள வேண்டும்.

ஒருவர் சட்ட முரணாகக் கைது செய்யப்பட்டு 24 மணித்தியாலங்களுக்கு மேல் பொலிஸ்காவலில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் போது சட்டத்தரணி அல்லது உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு அல்லது பொலிஸ் அத்தியட்சகருக்கு அல்லது பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு முறைப்பாடு செய்யலாம். முறையாக மனித உரிமை ஆணைக்குழுவிற்கு அறிவித்தல் வேண்டும். செய்யப்பட்ட முறைப்பாடுகளின் பிரதியை வைத்திருத்தல் வேண்டும்.

## குற்றம் ஒன்று புரியப்படுமிடத்து

**குற்றமென்றால் என்ன?**

சமூகத்திற்கு எதிரான தவறு குற்றமாகும். உதாரணம் கொலை, களவு, மோசடி என்பன

**குற்றம் புரியப்படும் போது:**

உமது பிரதேச பொலிஸ் நிலையத்தில் முறையாக முறைப்பாடு செய்யவும்

உமது முறைப்பாடு சரியாக பதிவு செய்யப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்த அதனை வாசித்துப் பார்க்க வேண்டும். வாசிக்க முடியாவிடின் பொலிஸ் அலுவலரை வாசிக்கும்படி கேட்டு உறுதிப்படுத்திய பின்னர் கையெழுத்திடவும்.

பொலிஸ் அலுவலர் ஒவ்வொருவரும் கையெழுத்திடப்பட முன்னர் வாக்கு மூலத்தை வாசித்துக் காட்ட கட்டுப்பட்டுள்ளனர்.

நீங்கள் வாசிக்க அனுமதிக்கப்படவில்லை அல்லது வாசித்துக் காட்டப்படவில்லை எனில் நீங்கள் அதில் கையொப்பமிட மறுக்கும் உரிமை உடையவர்கள்.

எதிர்காலப் பாதுகாப்பிற்காக என்ற சொற்கள் முறைப்பாட்டின் இறுதியில் பொலிஸ் பதிவு செய்திருக்கிறதா என்பதைப் பார்க்கவும். அப்படிப் பதிவு செய்யப்பட்டால் பொலிஸ் அம்முறைப்பாடு தொடர்பில் நடவடிக்கை எடுக்கமாட்டாது.

பொலிஸ் முறைப்பாட்டைப் பதிவு செய்ய மறுத்தால் அல்லது அதன் மீது செயற்படத் தவறினால் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் அத்தியட்சகர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அல்லது பொலிஸ் தலைமையகத்திற்கு முறையிடவும்.

குற்றம் சிறுவர்களுக்கு எதிராகப் புரியப்பட்டிருப்பின் நீங்கள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் பொலிஸின் பெண்கள் மற்றும் சிறுவர் பணியகத்திற்கு அறிவிக்கலாம்.

**01. தலைவர், சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை,**
**330, தலவத்தக் கொட வீதி,**
**மாதிவெல, சிறி ஜெயவர்த்தனபுர.**

**02. பணிப்பாளர், பொலிஸ்,**
**பெண்கள் சிறுவர் பணியகம்,**
**16, பாகொட வீதி, நுகேகொட.**

வேலையிடம் அல்லது பெருந்தெரு அல்லது பொதுப் போக்குவரத்தில் பாலியல் தொந்தரவை எதிர்த்தல்

எவரும் வேலையிடத்தில், பாதையில் அல்லது பொதுப் போக்கவரத்தில் பாலியல் தொந்தரவுக்குப் பெண்ணை அல்லது சிறுமியை உள்ளாக்க உரிமை உடையவர் அல்ல

பெண்கள் ஒவ்வொருவரும் அத்தகைய ஏதேனும் தொந்தரவை எதிர்ப்பதற்கு உரிமை உடையவர்கள்

நீங்கள் ஏதேனும் அத்தகைய தொந்தரவுக்கு உள்ளாக்கப்பட்டால் வெளிப்படையாக அதற்கு எதிர்ப்புத் தெரிவியுங்கள். அதனை செய்பவரை உடனடியாக நிறுத்தும்படி சொல்லுங்கள்.

அவர் அதனைத் தொடர்ந்து செய்தால் சுற்றி உள்ளவர்களிடம் கூறுங்கள்.

அவர் தொடர்ந்தும் அதனை செய்தால் பொலிசுக்கு முறையிடுங்கள். பஸ்ஸில் பயணம் செய்யும் போது நிகழ்ந்தால் பொலிஸ் நிற்குமிடத்தில் அல்லது பொலிஸ் நிலையத்திற்கு பஸ்ஸைக் கொண்டு சென்று நிறுத்தும்படி சாரதியைக் கேளுங்கள்.

## குடும்ப வன்முறையை முறையிடல்

எந்தக் கணவனும் தன் மனைவியைத் தாக்கவோ அவருக்கு காயம் விளைவிக்கவோ அல்லது தொந்தரவு செய்யவோ உரிமையற்றவர்.

எந்த மனைவியும் தனது கணவனால் விளைவிக்கப்படும் தாக்குதல்களையும் தொந்தரவுகளையும் அமைதியாக, எதிர்ப்பின்றி அல்லது முறைப்பாடு செய்யாது தாங்கிக் கொள்ளக் கடமைப்பட்டவர் அல்ல.

**தண்டனைச் சட்டக் கோவையின் கீழ்:**

ஒவ்வொரு மனைவியும் கணவனால் தாக்குதல் மற்றும் துன்பங்கள் ஏற்படுத்தப்படும் போது அவருக்கெதிராக பொலிஸ் முறைப்பாடு செய்யும் உரிமையைக் கொண்டுள்ளார்.

துன்பம் விளைவித்தல் என்பது ஒரு குற்றவியல் குற்றம் என்பதோடு தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் பகுதி 314/315/316/317 இன் கீழ் தண்டிக்கப்படுவார்.

குடும்ப வன்முறைத் தடைச்சட்டத்தின் கீழ் (2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கம்.)

குடும்ப வன்முறை என்பது குடும்பக் கட்டமைப்புகள் ஒரு நபர் அல்லது உறவினர் மற்றொரு குடும்ப உறுப்பினர் மீது ஏற்படுத்தப்படும் பௌதீக, பொருளாதார மற்றும் உணர்வு ரீதியான வன்முறை மற்றும் துஷ்பிரயோகங்களை உள்ளடக்கியதாகும்.

இதில் பாதிக்கப்படும் தரப்பு பொலிஸ் முறைப்பாடு செய்யும் உரிமையைக் கொண்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர் சார்பில் பொலிஸ் ஏதேனும் நடவடிக்கை எடுக்காத பட்சத்தில், பாதிக்கப்பட்ட தரப்பு தனிப்பட்ட வழக்கறிஞர் மூலம் நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.

**வெளிநாட்டு வேலை வாய்ப்புத் தேடுகையில் கவனிக்க வேண்டியவை**

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்யப்பட்ட முகவர்களூடாக வெளிநாட்டுத் தொழிலைத் தேடுவது எப்போதும் புத்திசாலித்தனமானது.

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் இருந்து பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டுத் தொழில் முகவர்களின் விபரங்களை ஒருவர் பெற முடியும்.

அதனது முகவரி:
**வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம்,**
**இல.234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்லை.**
**தொலைபேசி - 2864101**

வீட்டுப் பணிப் பெண்கள் தொழிலுக்காக வெளிநாட்டுத் தொழில் முகவராண்மைக்கு ஏதேனும் பணம் செலுத்த வேண்டிய தேவையில்லை. ஒருவர் சுரேக்கா காப்புறுதிக் கட்டணம் மட்டும் செலுத்த வேண்டியுள்ளது. காப்புறுதிக் கட்டணத் தொகை தொழிலுக்கு ஏற்ப வேறுபடும். விமான நிலைய வரி வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால் செலுத்தப்படுகின்றது.

முதற் தடவையாகப் பணிப் பெண்ணாக வெளிநாட்டுத் தொழில் தேடுபவர் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தால் வழங்கப்படும் பயிற்சிச் சான்றிதழைப் பெறுதல் கட்டாயமானதாகும்.

சுரேக்கா காப்புறுதிச் சான்றிதழ் இருவருடங்களுக்கு மட்டும் செல்லுபடியானதாகும். எனவே ஒருவர் ஒரு நாட்டில் இரண்டு வருடங்களுக்கு மேலாகத் தொழில் செய்ய விரும்பினால், காப்புறுதிக் காலத்தை குறிப்பிட்ட நபர் நீடித்தல் வேண்டும். இதற்குக் காப்புறுதி காலாவதியாக முன்னர் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தைத் தொடர்பு கொள்க.

நாட்டை விட்டுச் செல்ல முன்னர், உங்களுடைய குடும்பத்திடம் உங்களுடைய கடவுச் சீட்டு, காப்புறுதிச் சான்றிதழ் என்பவற்றின் பிரதி, தொழில் முகவரிகள், விபரங்கள் மற்றும் உங்கள் தொழில் தருணரின் விபரங்கள் என்பவற்றைக் கொடுக்கவும்.

கடவுச்சீட்டு மிக முக்கிய ஆவணமாக இருப்பதால் அதனை மிகப் பாதுகாப்பாக வைத்திருப்பதுடன் அதன் பிரதியை வேறாக வைத்திருக்கவும்.

இலங்கைத் தூதுவராலய முகவரி, தொலைபேசி இலக்கம், தொலை நகல் இலக்கங்களைப் பெற்ற உங்களுடன் வைத்திருக்கவும்.

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தால் பதிவு செய்யப்படாது வெளிநாட்டு வேலைக்காகச் செல்வது சட்ட முரணானதாகும். வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்தவர்களுக்கு பல நன்மைகள் உண்டு.

**(நன்றி - மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான வழக்கறிஞர் சங்கம் மற்றும் Women Defining Peace WDP)**

# அன்னியமாகின்றது எமது நாடு

எமது நாட்டிலே
மதத்திற்கு மதம் பிடித்து
மமதை கொள்கின்றது.

நான்
எனது
எனக்கு மட்டும்
என்ற
இறுமாப்புத் தோரணை...

நாட்டுத் தலைமைகள்
வாய்களில்
தெறிக்கின்ற
இனவாதப் பேச்சுகள்

எவரிடத்திலும்
இல்லாது போனது
எள்ளளவும்
கரிசனை...

யுத்தத்தின் கோரக்
குருதிக் கறைபடிந்த
காயங்கள் ஆறாத
ரணங்களுடன்
இன்னொரு சமூகம்
இன்னும்
ஓயாத
அலறலுடன்..

அதற்குள்
உருவி எடுக்கப்படுகின்ற
உடைமைகளும்
சுரண்டப்படுகின்ற
சுதந்திர நடமாட்டமும்...

மரணித்து விட்ட மனிதநேய
சாகரத்திலே
நிறத்தை இழந்து
சுயத்தை இழந்து
நிலம் மறந்து
இருப்பின்றி
தொடர்
இழப்புகளுடன்
அன்னியமாக்கப்படுகின்றோம்

குகா



http://www.tamilnewsnetwork.com/2012/05/05/surrendering-and-disappearing-where-are-they-now/

# காணாமல் போனோர் குடும்பங்களும் அத்தகைய குடும்பங்களது பொருளாதார மற்றும் உளச்சிக்கல் நிலையும்

மூன்று தசாப்த காலமாக இடம்பெற்ற யுத்தம் தந்த வடுக்களின் காயங்கள் இன்னும் ஓய்வதாக இல்லை. யுத்தம், இடப்பெயர்வு, பொருளழிவு, உயிரழிவு, அங்கவீனம் என்பவற்றோடு எமது நாட்டில் பலரையும் பீதியில் உறைய வைத்தது மட்டுமன்றி இன்றுவரை தொடர்கதையாக முடிவின்றி இருக்கும் ஒன்றாக காணாமல் போனோரின் தேடல் அமைகின்றது. உயிரோடு வீட்டை விட்டுச் சென்றவர் வீடு திரும்பாத நிலையும், வீட்டில் இருக்கும் போது இனந்தெரியாதோர் யாரோ வந்து ஆயுதமுனையில் கடத்திச் சென்றதாகவும் கூறி எத்தனையோ குடும்பத்தினர் தமது உறவுகளைத் தேடிய வண்ணமாக உள்ளனர். இது தவிர யுத்த காலத்தில் காணாமல் போனோர் மற்றும் சரணடைந்தோரில் காணாமல் போனோர் எனக் குறிப்பிட்ட தொகையினர் இன்னமும் எங்கே எனத் தெரியாதுள்ளனர். இவர்கள் பற்றிய தகவல்களை ஊடகங்களும், குடும்பத்தாரது முறைப்பாடுகளும் மட்டுமே உறுதிப்படுத்துகின்றன. அரசாங்கம் இது தொடர்பாக உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொள்ளாத தன்மை இன்னமும் காணப்படுகின்றது. இவர்களில் சிலர் சில நாட்களின் பின்னரும் சிலர் பல மாதங்களின் பின்னரும் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இருப்பினும் பலர் பற்றிய தகவல்கள் இன்னமும் உறுதிப்படுத்தப்படாது உள்ளது. குறிப்பிட்ட குடும்பத்தவர்கள் காணாமல் போன அல்லது கடத்தப்பட்ட தமது உறவுகள் உயிரோடு இருப்பதாகவே நம்புகின்றனர். குறிப்பிட்ட நபர்கள் இறந்தமைக்கான ஆதாரங்கள் இல்லாது உள்ளமையானது உறவினர்கள் மத்தியில் நம்பகத்தன்மையைக் கொடுக்காது என்பதனை இதனூடாக விளங்கிக் கொள்ள முடிகின்றது.

நாட்டில் உள்ள சிறைச்சாலைகள், தடுப்பு முகாம்கள் எனப் பல இடங்கள் தோறும் பொரும்பாலான காணாமல் போனோரது குடும்பத்தவர்கள் தமது உறவுகளைத் தேடி அலைந்த வண்ணமாக இன்றும் இருக்கின்றார்கள். வருடங்கள் பல ஓடி மறைந்த போதும் இவர்களது தேடலுக்கான முடிவு கிடைத்து விடவில்லை. இவர்களில் பெரும்பாலானோர் வடக்குக் கிழக்கைச் சேர்ந்த தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களாவார். இவர்களிலும் தமிழ் ஆண்களே அதிகளவில் காணாமல் போயுள்ளதை ஊடகங்களும் குடும்பத்தார்களது முறைப்பாடுகளும் உறுதிப்படுத்துகின்றன. நாட்டில் இதுவரை இடம்பெற்ற யுத்தம், அரசியல் பழிவாங்கல், தனிப்பட்ட விரோதம், ஆயுதக் குழுக்களது ஆதிக்கம், பயங்கரவாதம் போன்ற காரணிகள் இவ்வாறான காணாமல் போதல்களின் பின்னணியில் உள்ளன. எது எவ்வாறு இருப்பினும் காணாமல் போனோர் அல்லது கடத்தப்பட்டோரது குடும்பங்களில் நிகழும் இடர்களுக்குப் பொறுப்புக் கூற எத்தரப்பினரும் தயாராக இல்லை என்பதே தெளிவான உண்மையாகும். பேசுபொருளாக மட்டும் அவ்வப்போது சந்தர்ப்ப

சூழலுக்கு ஏற்ப பாதிக்கப்பட்டோர்கள் பிரச்சினைகள், துன்பங்கள் இடம்பெறுகின்றன. குறிப்பிட்ட குடும்பத்தாரது வேண்டுகோள்கள் மற்றும் பரிந்துரைகளை உரிய தரப்பு ஏற்றுக் கொள்வதில் அக்கறை காட்டாது செயற்பட்டமை: செயற்படுகின்றமையானது மேலும் இவர்களைப் போன்றும் எதிர்காலத்தில் காணாமல் போவோர் அல்லது கடத்தப்படுவோர் பற்றி சிரத்தை கொள்ளாது உள்ளமையை வெளிப்படுத்துகின்றது.



இவ்வாறான தருணத்தில் பல வருடங்களாகக் காணாமல் போன அல்லது கடத்தப்பட்டோர் குடும்ப நிலை மற்றும் அவர்களது பொருளாதாரப் பின்னணி பற்றி அறிவது அவசியமாகும். ஏனெனில் யுத்தத்தின் விளைவால் இன்றுவரை பல வழிகளிலும் பாரிய பின்னடைவுகளையும், சவால்களையும் பெண்களே குடும்ப ரீதியில் அனுபவித்து வருகின்றனர். இதனால் காணாமல் போனோர் அல்லது கடத்தப்பட்டோர் குடும்பத்தின் வாழ்வாதார நிலை மற்றும் அவர்களது பிள்ளைகளது கல்வி, எதிர்காலம் என்பன பற்றிச் சிந்திக்க வேண்டிய அவசியத்தில் பெண்களே உள்ளனர். அதுமட்டுமன்றி காணாமல் போனோர் அல்லது கடத்தப்பட்டோரைத் தேடிச் செல்லுகின்ற போது ஏற்படுகின்ற பணச் செலவுகளையும் சரி செய்ய வேண்டிய தேவையும் இவர்களுக்கு உண்டு. சில நிறுவனங்கள் இது தொடர்பாக உதவிகளைப் புரிந்து வருகின்றபோதும் அவற்றை நாடிச் செல்லும் போது குழந்தைகளைப் பொறுப்புடன் பார்த்துக் கொள்வதற்கு உதவியற்ற நிலையில் பல பெண்கள் வாழ்கின்றனர். ஒவ்வொரு இடமாகத் தேடிச் செல்வதால் குடும்ப வருமானமீட்டல் என்பது தடைப்படுகின்றது. இதனால் வருமானம் பெரும் பின்னடைவாக அமைந்து விடுகின்றது. இது தொடர்பாக பாதிக்கப்பட்ட சிலரை அணுகிய போது அவர்களது சிக்கலான வாழ்க்கை மற்றும் முடிவின்றிய தேடல்கள் குறித்துத் தெரிந்து கொள்ள முடிந்தது.

"எனது கணவருக்கு வயது 46. எங்களுக்கு மூன்று பெண் குழந்தைகள். மூத்தவளுக்கு 12 வயது, இரண்டாவது மகளுக்கு 10 வயது, கடைசி மகளுக்கு 08 வயது. எனது கணவர் விடுதலைப் புலிகள் உறுப்பினராக இருந்தார். 2009.05.15, 16 ஆம் திகதிகளில் யுத்தம் நின்று ஆயுதங்கள் எல்லாம் மௌனிக்கப்பட்டு எல்லோருமே சிவிலியன்களாக மாறிட்டினம். 18 ஆம் திகதி காலை 7 மணிக்கு நிறையப் பொறுப்பாளர்கள் சரணடைந்தனர். போராளிப் பெண்கள் என்ன மாதிரி எனத் தெரியாது. 18.05.09 முல்லைத்தீவில் ஜோசப் பாதிரியாருடன் நூற்றுக்கணக்கானோர் சரணடைந்தார்கள். இதில் போராளிக் குடும்பங்களும் அடங்கும். குடும்பமாகப் போன பொறுப்பாளர்கள் இன்று குடும்பமாக இல்லை. நான் அரசாங்க உத்தியோகத்தர். அதனாலை என்னை என் கணவருடன் போக விடயில்லை. கலைச்சுப் போட்டினம். நான் தான் எனது கணவரை வற்புறுத்திக் கெஞ்சிக் கேட்டு எனக்காக சரணடையுங்கோ எனச் சொன்னன். முதல்லை ஒன்றும் சொல்லாமல் இருந்தார். பிறகு சொன்னார் மூன்று பிள்ளைகளோடை கஸ்ரப்படப்

**"என் மனதில நடந்த போர்தான் ஞாபகம் இருக்கு. மறக்கமாட்டன். பிணக் குவியல்களைக் கடந்து வந்தனான். நான் ஒரு பொருளைத் துலைக்கயில்லை. ஒரு உயிரைத் துலைச்சிருக்கிறன். கண்ணுக்கு முன்னாலை பறி குடுத்திட்டு வந்தனான். எப்பிடித் தேடாமல் இருக்க ஏலும்? எல்லாரும் சொல்லீனம் என்னை இப்படி வெளிப்படையாகத் தேட வேண்டாம், பிறகு எனக்குப் பயம் என்டும் சொல்லீனம். எனக்குப் பயம் இல்லை. என்னட்டை உயிரைத் தவிர எதுவுமே இல்லை. அதால தொடர்ந்தும் தேடுறன். எனக்கு ஒரு முடிவு வேணும்."**

போகிறீங்கள் என்றார். என்ரை மனசில பதட்டம். ஆனால் சரணடைஞ்சவையளை அரசாங்கம் சுடும் என நான் நம்பலை. பாதர் உடன் இன்னும் பல குடும்பங்கள் நின்றவை. சரணடைஞ்சவையின்ரை பெயர்களை பாதர் ஒரு பேப்பரில எழுதி வைச்சிருந்தார். பாதரும் இப்ப இல்லை எனச் சொல்லினம். ஏனென்டால் சரணடஞ்சவையோடை பாதர் போனவர். 18.05.09 காலமை சரணடயப் போனவை. அதன் பிறகு நாங்கள் அவையளைக் காணலை. 14.06.09 வீரகேசரிப் பேப்பரில எழில் முகாமில் இருந்தபோது விசாரணைக்காக கொழும்பு கொண்டு வரப்பட்டதாக செய்தி வந்திருந்தது. ஆனா நான் போய் அதை எழுதியவரை சந்திக்க முயற்சி செய்தன். அவர் இப்ப அங்க இல்லை எனச் சொல்லித் திருப்பி விட்டிட்டினம். பத்திரிகை அலுவலகத்தில் என்னைப் பார்த்துப் பதட்டப்பட்டார்கள். திருப்பி அனுப்புவதிலேயே கருத்தாக இருந்தார்கள்.

இப்ப நான் மனித உரிமைகள் இல்லத்தூடாக மேல் நீதிமன்றில் வழக்குப் போட்டுள்ளேன். இதில் அச்சுறுத்தல் இருக்கும் என எல்லாரும் சொன்னார்கள். இனி எதை எதிர்கொள்ளப் போறம்? மூன்டு வருசம் தேடித் தேடிக் களைச்சுப் போனன். மூன்டு பிள்ளைகளுடன் டீ.யூ. குணசேகர, ரவூவ் ஹக்கீம், அமைச்சர் கஜதீர எல்லாரையும் சந்திச்சன். எமக்கு நல்லிணக்கத்தைக் காட்டுறதா இருந்தால், எமக்கு ஒரு பதில் தந்திருக்கலாம். சுடுறதென்டால் நானும் பிள்ளைகளும் தானே? பரவாயில்லை. சீ.ஐ.டீ க்கு பயத்தில நிறையப் பேர் சொல்லாமல் இருக்கினம். குடும்பம் குடும்பமாகப் போன போராளிகள் இன்றில்லை. கிட்டத்தட்ட எனக்கு தெரிந்த 5,6 குடும்பம் இன்றில்லை.

எனது கணவரும் வேறை ஆக்களும் 18.05.09 சரணடைஞ்சவை. நான் 19 பின்னேரம் 4 மணிபோல ஓமந்தை வந்தன். அங்கை எல்லாருக்கும் ஒலிபெருக்கியில் தெளிவாக அறிவிச்சுக் கொண்டு இருந்தார்கள். ஒரு நாள் போராளி என்டாலும், எல்லைப் படை என்டாலும், ஆரென்டாலும் சரணடையவும். பிறகு வெள்ளை வான் பிடிச்சால் நாங்கள் பொறுப்பில்லை எனத் தெளிவாகச் சொன்னவை. எனது மகளுக்கு அப்பன்டிசைட் ஒப்பரேசன் செய்தது. அதைக் காட்ட நான் போயிட்டன். அந்த நேரம் ஆமி வந்து எழில்டை மனிசி எங்கை எனத் தேடியதாகப் பிறகு சொன்னார்கள். அரசாங்க உத்தியோகத்தர் என்டதாலை நான் வவுனியா பொது ஆஸ்பத்திரிக்கு மகளுடன் செல்ல முடிந்தது. ஆனால் அங்கு டொக்டர் இருக்கயில்லை. ஆண் மேல் நேஸ் ஒருத்தர் வன்னியால் வந்தவைக்கு சிகிச்சை இல்லையென மறுத்துவிட்டார். அதுக்குப் பிறகு எனக்கு கொப்புளிப்பானும், இளைய மகளுக்கு செங்கமாரியும் வந்தது. அதால மற்ற ரெண்டு பிள்ளைகள் தனிச்சே இருந்ததுகள்.

அதுக்குப் பிறகு எனது ஐ.சி யாழ்ப்பாணம் என்டதாலும், அரசாங்க உத்தியோகத்தருக்கான ஐ.சியும் இருந்ததால் வெளியே வந்திட்டன். கொழும்பு வந்து என்னிடம் இருந்த நகைகளை வித்து இந்தியா போயிட்டன். கொழும்பில் ஒருத்தர் மூலம் ஐ.சீ.ஆர்.சி க்கு கணவர் சரணடைந்ததாக கடிதம் போட்டன். பிறகு இந்தியா போய் யூ.என்.எச்.சீ.ஆர் இடம் கணவர் தொடர்பாக முறைப்பாடு செய்தன். இவரது படத்தையும் குடுத்தன். அதுவரையும் அப்படி யாருமே வந்து அப்படி சரணடைஞ்சவை பற்றி முறையிடவில்லை என அவர்கள் சொன்னார்கள். எனக்கு வெளிநாட்டு உதவி இல்லை. பணக் கஸ்ரம். மகளுக்கு ராமச்சந்திராவில் சிகிச்சை செய்தன். இவரைப் பற்றி தகவல் இல்லை. குருமன் காட்டில் எங்களது ஒபிஸ் மீண்டும் இயங்கத் தொடங்கியது. நாட்டுக்குத் திரும்பிட்டன். வவுனியா வந்தவுடன் பதிய செக்கட்டிப் புலவு ஜீ.எஸ் 30,000 ரூபா கேட்டார். இன்னொருத்தர் 45,000 கேட்டார். முத்திரையும் தரலாம் என்டார். அதன் பிறகு நான் பதியவில்லை. தோணிக்கல்லில் இருந்தன். மீள்குடியேற்ற டோக்குனுடன் இருந்திட்டன்.

இப்போ கிளிநொச்சியில் அலுவலகம் இருக்கு. யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து போறன். அக்காவுடன் பிள்ளைகள் இருக்கினம். இடப்பெயர்வுக்குப் பிறகு 5 பள்ளிக்கூடத்துக்கு பிள்ளைகளை மாத்திட்டன். பாதுகாப்பு, பின்னணிப் பழிவாங்கல் என நிறையப் பிரச்சினை. முதல்ல எனக்க குவாட்டஸ் தர மறுத்திட்டினம். பிறகு ஜீ.ஏ யுடன் கதைச்சுத்தான் றூம் கிடைச்சது. இப்ப சனி, ஞாயிறு ஊருக்குப் போறது. மற்றபடி றூமில் தான். வீட்டுத் திட்டம் தரவில்லை. ஜீ.எஸ் ஆமியுடன் கதைக்க சொல்லுறார். 3 பிள்ளைகளுடன் வந்து காணிக்குள் தரப்பாளுக்குள் இருந்தால் வீட்டுத் திட்டம் தருவதாக சொன்னார். ஆனால் எனது பிள்ளைகளுக்குப் பாதுகாப்பில்லை. ஆர்.டீ.எஸ் சுடன் கதைக்கச் சொல்லுறார். பெமிட் இருந்தும் எனக்கு வீட்டுத் திட்டம் இல்லை. இடையிடையே சீ.ஐ.டி என்னை விசாரிக்க வருவினம். வெருட்டுவினம். என் விசயம் உலகமறிஞ்ச உண்மை. அதால நான் பயப்படலை. கத்துருசிங்க ஆமி என்னை மூன்டு தரம் கூப்பிட்டு விசாரிச்சவர். ஒருக்கா எழில்டை மனிசி என்ட ரீதியிலும், பிறகு நான் இயக்கத்துக்கு வேலை செய்வதாக அறிந்ததாகவும் சொன்னார். பிறகு எனது கணவர் தொடர்பாக முறைப்பாடு செய்தால் தான் என்னைச் சுடுவதாகவும் சொன்னார். பிறகு என்னை திமிர் பிடிச்சவள் என்றார். நான் பயிற்சி எடுக்கலை. போராளி இல்லை. தேசிய கீதம் பாடல்லை. நேர்மையான அரசாங்க உத்தியோகத்தர். அதால பயம் இல்லை. என் மனதில நடந்த போர்தான் ஞாபகம் இருக்கு. மறக்கமாட்டன். பிணக் குவியல்களைக் கடந்து வந்தனான். நான் ஒரு பொருளைத் துலைக்கயில்லை.

ஒரு உயிரைத் துலைச்சிருக்கிறன். கண்ணுக்கு முன்னாலை பறி குடுத்திட்டு வந்தனான். எப்பிடித் தேடாமல் இருக்க ஏலும்? எல்லாரும் சொல்லீனம் என்னை இப்படி வெளிப்படையாகத் தேட வேண்டாம். பிறகு எனக்குப் பயம் என்டும் சொல்லீனம். எனக்குப் பயம் இல்லை. என்னட்டை உயிரைத் தவிர எதுவுமே இல்லை. அதால தொடர்ந்தும் தேடுறன். எனக்கு ஒரு முடிவு வேணும்."

"எனது கணவருக்கு வயது 42. அவர் கடத்தப்பட்டு காணாமல் போய் 3 வருடங்கள் ஆகின்றன. அவர் ஓர் அரச சார்பற்ற நிறுவனத்தில் வேலை செய்தார். பொலிஸ் அவரை அரஸ் பண்ணி ரிலீஸ் பண்ணின அன்று ரவுண் ஹோல் பக்கமாக வந்து கொண்டிருந்தோம். குடும்பமாக வந்த போது வெள்ளை வானில் ஆயுதங்களுடன் வந்தவர்கள் வாகனத்தை மறித்து அவரைக் கொண்டு சென்றனர். வெள்ளை வானில் வந்தவர்கள் எமது வாகனத்தின் சாவியையும் பூட்டிக் கொண்டு போய்விட்டனர். பிறகு கறுவாத் தோட்டப் பொலிஸ் வந்து தான் வாகனத்தை எடுக்க உதவி செய்தார்கள். அதோடை கறுவாத் தோட்டப் பொலிஸிடம் முறைப்பாடும் செய்தோம்.

எங்களுக்கு 3 பிள்ளைகள். 2 ஆண்கள். 1 பெண் பிள்ளை. எல்லாரும் படிக்கிறார்கள். இவர் கடத்தப்பட்டு 6 மாதத்திற்குப் பின்பே வேலை செய்யத் தொடங்கினேன். அதற்கு முதல் வேலை பார்க்கக் கூடிய மனநிலை எனக்கு இருக்கவில்லை. ஐ.சி.ஆர்.சி, மனித உரிமைகள் ஆணைக்குழு, மனித உரிமைகளுக்கான நிலையம், அரசியல் கட்சிகள் என எல்லா இடமும் முறைப்பாடு செய்தேன். விசாரிக்கிறதாக சொல்லுறீனம். ஆனால் இதுவரை எந்த பதிலும் இல்லை. பிள்ளைகளுடன் எனது வருமானத்தை கொண்டு செல்ல சரியாகவே சிரமப்படுறன். எனது கணவரின் சகோதரர் இடையிடையே ஏதாவது உதவி செய்வார். பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ள யாரும் இல்லை.

எனது கணவர் காணாமல் போய் கொஞ்ச நாட்களில் அவர் தம்மிடம் இருப்பதாக சொல்லி 25 லட்சத்தை ஓர் ஆயுதக்குழு எங்களிடம் கேட்டது. கடைசியில் 6 லட்சம் தருவதாக சம்மதித்து உண்டியல் மூலம் ஒருவருக்கு இந்தியா அனுப்பும்படி சொன்னார்கள். கடைசியில் ஏமாற்றப்பட்டது தான் மிச்சம். அநியாயமாகிப் போனது. இன்றுவரை தேடிக் கொண்டு இருக்கிறேன். என்ன வேலை செய்தாலும் அடிமனதில் இதே யோசனை. இதே சிந்தனை. முடிவு இல்லாத தேடலாக எந்தவித நடவடிக்கையும் எடுக்க முடியாமல் இன்று... நாளை... வருவார் என நாங்களும் பிள்ளைகளும் பார்த்துக் கொண்டிருக்கிறம். ஒரு தகவலைத் தந்து விட்டு 4,5 வருசத்தால விட்டாலும் பரவாயில்லை. அவர் உயிரோடு இருப்பதாக தெரிந்தால் போதும். எதுவுமே தெரியாத பெரிய இடைவெளியாகி விட்டது. என்ரை வேதனைக்குப் பிறகு யாருடைய குடும்பமும் உடையக் கூடாது என நினைப்பன். வேறு குடும்பங்களைப் பார்க்கும் போது ஏக்கமும் வருகுது. சந்தோசமாக 12 வருசம் வாழ்ந்திட்டு இப்ப இப்படி இருக்க பெரிய ஏக்கமாக இருக்குது. பிள்ளைகள் எங்கடை அப்பா வருவார் என்று இருக்கிறார்கள். இந்த நிலை யாருக்கும் வரக் கூடாது. துக்கம் எத்தனையோ வடிவத்தில் இருக்குது. இது பெரிய கொடுமை. மற்றைய ஆக்களுக்கு எங்கட பிரச்சினை ஒரு சம்பவம் மட்டுமே. ஆனால் எங்களுக்கு இது வாழ்க்கை. குடும்பம் உடையுறது பயங்கரமான கொடுமையான சூழ்நிலை என்றுதான் நான் சொல்வேன்."

புத்தளத்தைச் சேர்ந்த நபரொருவர் கடத்தப்பட்டு கிட்டத்தட்ட ஒன்றரை வருடத்தின் பின்னர் சடலமாக மீட்கப்பட்டார். அவரது கடத்தல் பற்றியும் அவரது இழப்பினால் அவர்களது குடும்பத்தில் நிலவும் வருமானப் பற்றாக்குறை மற்றும் கடத்தல் தொடர்பான



புகைப்படம் - பிரிஸ்லியா

**"இலங்கையைப் பொறுத்தவரையிலும் யுத்தம் மற்றும் இனப்பிரச்சினை காரணமாகக் கொல்லப்பட்ட அல்லது காணாமல் போன நபர்கள் எனும் போது அவர்கள் சிறுபான்மை மக்களைச் சார்ந்தவர்களாகவும், அதிலும் தமிழ் மக்களே அதிகளவில் இதுவரை உயிரிழப்புகளைச் சந்தித்தும் உள்ளார்கள்."**



> **“குறிப்பிட்ட அரச சார்பற்ற நிறுவனத்தில் எங்கட வாப்பாவும் ஆரம்ப ஸ்தாபகர்களில் ஒருவர். அடுத்த தலைவராகக் கூடிய வாய்ப்பு அவருக்கு இருந்தது. அது ஏற்கனவே இருந்த தலைவருக்கு விருப்பமில்லை. இதோடை உள்விவகாரம் நிறையவே இருந்தது. பதவி ஆசையில் செய்திருக்கலாம்.”**

நீதியான முடிவின்மை பற்றியும் அவர்கள் கூறும் போது “எங்கட வாப்பா ஓர் அரசாங்க உத்தியோகத்தர். கிராம சேவகராக இருந்து பின்பு அவர்களுக்கான இணைப்பாளராகக் கடமையாற்றினார். அத்தோடு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் ஆரம்ப ஸ்தாபகர்களில் ஒருவராகவும் இருந்தார். கடத்தப்படும் போது அவருக்கு வயது 55. அதே நிறுவனத்தின் யாப்பின் பிரகாரம் அடுத்த தலைவராகக் கூடிய வாய்ப்பு எங்கட வாப்பாவுக்கு இருந்தது. இந்த சந்தர்ப்பத்தில் பொலன்நறுவைக்கு தொழில் விடயமாக 2010.02.11 அன்று சென்றிருந்தார். அன்றைய தினம் பிற்பகல் 3.30 மணிபோல அவரை வேறொரு வாகனத்தில் மாற்றிக் கடத்தியுள்ளார்கள். வாப்பா கடத்தப்பட்டு 3 மாதத்திற்குள் கடத்தியவரை பொலிஸ் கண்டு பிடித்தது. ஆனால் அரசியல்வாதி ஒருவரின் அழுத்தம் காரணமாக குறிப்பிட்ட சந்தேகநபர் கைதாகவில்லை. அதற்குள் நாங்கள் புத்தளம் மற்றது பொலன்நறுவைப் பொலிஸ், ஐ.சீ.ஆர்.சீ, மனித உரிமைகள் ஆணைக்குழு, சீ.எச்.ஆர்.டீ, என எல்லா இடத்துக்கும் அறிவித்தோம். அதன் பிறகு கிட்டத்தட்ட ஒன்றரை வருசத்தின் பின்னர் புத்தளம் பெரியபள்ளி வாசலில் ஒன்று சேர்ந்து கதைத்தோம். ஆர்ப்பாட்டம் செய்தோம். மதுரங்குளியிலையும் ஆர்ப்பாட்டம் செய்தோம். அதுக்குப் பிறகு புத்தளம் முந்தல் பொலிஸ் சீ.ஐ.டீ யிடம் இந்தக் கேஸைப் பாரம் கொடுத்தது. அதன் பிறகு சீ.சீ.டீ யிடம் கேஸ் போனது. அதுக்குப் பிறகே கிளிநொச்சியில் வைத்து நௌசாட் என்பவர் அரஸ் செய்யப்பட்டார். அவர் அடையாளங்காட்டிய இன்னொரு நபர் மூலம் எங்கட வாப்பாவினது உடல் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் தற்போது சந்தேகநபர்கள் இருவரும் பிணையில் விடுதலையாகி விட்டார்கள்”.


கடத்தலுக்கான காரணம் பற்றி அவர்கள் கூறும் போது “குறிப்பிட்ட அரச சார்பற்ற நிறுவனத்தில் எங்கட வாப்பாவும் ஆரம்ப ஸ்தாபகர்களில் ஒருவர். அடுத்த தலைவராகக் கூடிய வாய்ப்பு அவருக்கு இருந்தது. அது ஏற்கனவே இருந்த தலைவருக்கு விருப்பமில்லை. இதோடை உள்விவகாரம் நிறையவே இருந்தது. பதவி ஆசையில் செய்திருக்கலாம். அதோடை அந்த நிறுவனத்தில் இருந்தோர்களில் எங்கட வாப்பா மட்டுமே உள்ளூர்க்காரர். மற்றையோர் வெளிமாவட்டக்காரர்கள். அவங்கட நோக்கம் குறிப்பிட்ட நிறுவனத்தை மன்னாருக்குக் கொண்டு போவதேயாகும். அவங்களுக்கு உள்ளூர் மக்களுக்கு உதவ விருப்பமில்லை. இதுக்கு எங்கட வாப்பா எதிர்ப்பாக இருந்தார். இப்படியான காரணங்களுக்காகக் கடத்தியிருக்கினம். எங்கட வாப்பாட பிரேத பரிசோதனையில் மூச்சுத் திணறல் மூலம் மரணித்ததாகக் கூறப்பட்டுள்ளது. கடத்தியவர்கள் தாம் கடத்திக் கொண்டு போய்க் கட்டி வைத்த போது மூச்சுத் திணறல் வந்து இறந்ததாகவே சொன்னார்கள். டீ.என்.ஏ ரிப்போட் இன்னும் எங்களுக்குத் தரவில்லை. அரசியல் அழுத்தம் காரணமாக இருக்கலாம். 08.08.2011 அன்று குடுத்தோம். இப்ப வரையிலும் தரலை. இனி உயர்நீதிமன்றத்தூடாகப் போறதாக இருக்கோம்.வாப்பா சம்பந்தப்பட்ட எதுக்கும் மரணச் சான்றிதழ் தேவை. ஆனால் டீ.என்.ஏ இல்லாமல் மரணச் சான்றிதழ் தரமாட்டார்கள். வாப்பா அரச சேவையில் பணியாற்றியவர். ஈ.ரீ.எவ், ஈ.பீ.எவ், பென்சன் எதுவாக இருந்தாலும் எடுப்பதற்கு மரணச் சான்றிதழ் தேவை. எங்கட உம்மா வயசாளி. சீனி வருத்தம் பிரஷர் எல்லாம் இருக்கு. செலவுக்கு வருமானம் இல்லை. படிக்கிற வயசில தம்பியிருக்கிறார். உயர்தரம் படிக்கிறார். நாங்கள் மொத்தம் 5 பேர். 4 பேர் கலியாணம் முடிச்சிட்டோம். நானும் தம்பியும் உம்மாவோடை இருக்கிறம். எனக்கும் இப்ப தொழில் இல்லை. ஆரம்பத்தில அந்த நிறுவனத்திலதான் வேலை செஞ்சேன். வாப்பாட பிரச்சினைக்குப் பிறகு போறல்லை. எங்களுக்கு இருக்கிற காணியில வாற வருமானத்தில வாழுறம். உம்மாக்கு நோய்

இருக்கிறதால செலவு மிச்சம். வாப்பாட பென்சன் எதுவுமே உம்மாவால எடுக்க ஏலாமல் இருக்கு. உம்மாவுக்கு 53 வயசு. வாப்பாட கேஸ் விசயமாகப் போறதென்டாலும் காசுப் பிரச்சினை இருக்கு. கேஸ் பொலன்நறுவையில தான் நடக்குது. அங்க இருந்து கடத்தப்பட்டதால அங்கதான் நடக்குது. நாங்கள் புத்தளத்தில் இருந்து போய் வாறது என்டால் அதுவும் போக்குவரத்துப் பிரச்சினையாக இருக்குது. டீ.என்.ஏ வராமல் எதுவுமே செய்ய முடியாது இருக்கோம்."

இலங்கையைப் பொறுத்தவரைக்கும் மனித உரிமை மீறலானது யுத்தம் மற்றும் தனிப்பட்ட நபர்களது சுயலாபத்திற்காகவும் இடம்பெற்றுள்ளதை மேற்கூறப்பட்ட கடத்தல் சம்பவத்தினூடாகத் தெரிந்து கொள்ளலாம். தனிப்பட்ட விரோதம் காரணமாக வயதானவர்கள் முதல் இளைஞர்கள் வரை கடத்தப்பட்டும் கொலை செய்யப்பட்டும் உள்ள சம்பவங்கள் ஏராளமாக உள்ளன. இதனால் அவர்களது குடும்பம் பாரிய தாக்கத்தை எதிர்கொள்கின்றது. வயதான காலத்தில் கூட பெண்கள் நிம்மதியாக வாழ முடியாத துர்ப்பாக்கியத்தை இவ்வாறான சிலரது சுயலாபச் செயல்கள் உண்டாக்கி விடுகின்றன. இதற்குப் பொறுப்பான அரசியல் பதவிகளில் உள்ளோர் அனுசரணையாளர்களாக இருப்பது வேதனைக்குரியது. மக்களது வாக்குகளால் தேர்தலில் வெற்றியீட்டிய பின்னர் சில அரசியல்வாதிகள் இவ்வாறான பிற்போக்குத்தனமான செயல்களுக்கு ஆதரவு வழங்கி வருவது மக்களை ஏமாற்றும் செயல் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே, இலங்கையைப் பொறுத்தவரையிலும் யுத்தம் மற்றும் இனப்பிரச்சினை காரணமாகக் கொல்லப்பட்ட அல்லது காணாமல் போன நபர்கள் எனும் போது அவர்கள் சிறுபான்மை மக்களைச் சார்ந்தவர்கள் என்பதையும், அதிலும் தமிழ் மக்களே அதிகளவில் இதுவரை உயிரிழப்புகளைச் சந்தித்துள்ளார்கள். இடப்பெயர்வு, பொருளழிவு, அசையாச் சொத்துகள் இழப்பு என வடக்கு கிழக்கு மக்கள் பறிகொடுத்தவை சொல்லில் அடங்காதவை. இருப்பினும் உள்ளூர் மட்டத்தில் அவ்விழப்போ அல்லது துயரங்களோ சிரத்தையுடன் கவனத்தில் எடுக்கப்படாத தன்மையுடன் இருப்பதை காணலாம். இதுவரை காணாமல் போன அல்லது கடத்தப்பட்ட நபர்கள் தொடர்பான விசாரணைகள் ஆக்கபூர்வமின்றி நடைபெற்றுக் கொண்டிருப்பதையும், ஆனால் தமது உறவுகளைத் தொலைத்த குடும்ப அங்கத்தவர்களோ பொருளாதார ரீதியான சிக்கல்களுடனும், பாரிய மன உளைச்சலோடும் காலம் கடத்தி வருவதையும் பாதிப்படைந்த குறிப்பிட்ட சில நபர்களுடன் உரையாடும் போதே தெரிந்து கொள்ள முடிந்தது. ஊடகங்களைப் பொறுத்தவரைக்கும் அல்லது வாசகர்களைப் பொறுத்தவரைக்கும் மேற்கூறப்பட்ட விடயம் ஓர் சம்பவமாகவும் அல்லது ஓர் செய்தியாகவும், காவல்துறையைப் பொறுத்தவரைக்கும் ஓர் வழக்காகவுமே காணப்படும். ஆனால் பாதிப்புக்குள்ளான குடும்பத்தினருக்கு இது வாழ்க்கை தொடர்பான விடயமாகும். இதனை எப்போது எமது சமூகமும், அரசும், சுயலாபம் கருதும் அரசியல்வாதிகளும் புரிந்து கொள்ளப் போகின்றார்களோ தெரியவில்லை.

***குகநிதி குணச்சந்திரன்***



# மன்னார் முறுகல் நிலையும் அதன் பின்னணியும்

2012 ஆடி 18ஆம் திகதி மன்னார் நகரிலுள்ள நீதவான் நீதிமன்றத்தினை அண்டிய பிரதேசத்திலே நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டமொன்று வன்முறையில் முடிவடைந்திருக்கின்றது. மன்னாரிலுள்ள உப்புக்குளத்தில் அமைந்துள்ள மீன்பிடித் துறைமுகம் தொடர்பாகவே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. உப்புக்குளம் மற்றும் ஜோசப்வாஸ் மீள் குடியேற்றக் கிராமத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்கள், மேலதிக அரசாங்க அதிபர், சட்டத்தரணிகள் சங்கம், பொலிஸ் மற்றும் மீன்பிடித் திணைக்களத் தலைவர்கள் ஆகியோருடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களின் அடிப்படையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.



மன்னார் நகரத்தில் அமைந்துள்ள கோந்தப்பிட்டியிலுள்ள மீன்பிடித் துறைமுகத்தினை உப்புக்குள முஸ்லிம்கள் அவர்கள் வெளியேற்றப்படுவதற்கு முற்பட்ட காலத்திலிருந்து நீண்டகாலமாகப் பயன்படுத்திவந்தனர் என்பதுவும், கோந்தப்பிட்டியிலுள்ள மீன்பிடித் துறைமுகமானது உப்புக்குள மக்களுக்கே பாரம்பரிய ரீதியாகச் சொந்தமானது என்பதுவும் பல்வேறு சிவில் நிர்வாகிகளுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல் மற்றும் நேர்காணல்களிலிருந்து தெளிவாகத் தெரியவந்தது. விடத்தல்தீவு மீனவர்களுடன் நடத்தப்பட்ட நேர்காணலின்போது மட்டுமே இதற்கு மாற்றமான கருத்து வெளிப்படுத்தப்பட்டது. விடத்தல்தீவு மீனவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் மீன்பிடித் துறைமுகமானது இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமானது என அவர்களுக்கு 2006ஆம் ஆண்டில் கூறப்பட்டதாகக் குறிப்பிட்டனர். இவ்வாறு குறிப்பிடப்பட்டதைத் தொடர்ந்து தமது படகுகளைக் கோந்தப்பிட்டி படகுத் துறையில் கட்டுவதற்கு அனுமதிக்குமாறு இம்மீனவர்கள் மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனத்திடம் வேண்டுகோள் விடுத்தனர். மன்னார் பாராளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதன் இந்த வேண்டுகோளைப் பரிந்துரை செய்திருந்தார். 2006.06.15இல் கூட்டுத்தாபனத் தலைவர் கையொப்பமிட்டு வழங்கிய கடிதமொன்றின் மூலம் விடத்தல்தீவு மீனவர்களுக்குப் படகுத்துறையினைப் பயன்படுத்துவதற்கான தற்காலிக அனுமதி வழங்கப்பட்டது. கூட்டுத்தாபனம் வழங்கிய கடிதத்திலே படகுத் துறையினைப் பயன்படுத்துவதற்கான கால எல்லை குறிப்பிடப்படவில்லை. இவ்வாறு கோந்தப்பிட்டி படகுத் துறையினைப் பயன்படுத்த கூட்டுத்தாபனம் அனுமதித்தமையானது அது இழைத்த தவறாகும் என மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்தார். கோந்தப்பிட்டியினை அண்டிய துறையினை வழங்குவதற்கே கூட்டுத்தாபனத்திற்கு அதிகாரம் இருக்கின்றது என்றும் கோந்தப்பிட்டித் துறையினை வழங்குவதற்கல்ல என்றும் தெரிவித்த அவர், கோந்தப்பிட்டிப் படகுத் துறையினை விடத்தல்தீவு மீனவர்களுக்கு கூட்டுத்தாபனம் வழங்கியமை கூட்டுத்தாபனத்தின் தரப்பில் இழைக்கப்பட்ட தவறாகும் என்றும் தெரிவித்தார்.

விடத்தல்தீவு கிராமமானது மன்னார் பெருநிலப் பரப்பிலே மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ளது. 1999ஆம் ஆண்டு இப்பிரதேசத்தில் நிலவிய சிவில் யுத்தம் காரணமாக இப்பிரதேசத்தினைச் சேர்ந்த 332 குடும்பங்கள் இடம்பெயர்ந்து மன்னார் தீவில் அமைந்துள்ள தோட்டவெளியிலுள்ள கோயில் காணி ஒன்றில் குடியேறினர். இவர்கள் மீள் குடியேறிய கிராமம் ஜோசப் வாஸ் மீள்குடியேற்றக் கிராமம் எனப்

பெயரிடப்பட்டது. இந்த மீள்குடியேற்றக் கிராமமானது கோந்தப்பிட்டி படகுத் துறையிலிருந்து 09 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்திருக்கின்றது. ஆனால் உப்புக்குளமோ மன்னார் நகரினுள் அமைந்துள்ளதுடன் மன்னார் தீவுனுள்ளும் அமைந்துள்ளது. கோந்தப்பிட்டி எனும் இடம் உப்புக்குளத்தின் கடற்கரையோர எல்லைப் பகுதியில் அமைந்துள்ளது. மிகப்பெரும்பான்மையாக முஸ்லிம்களைக் கொண்ட உப்புக்குள மக்கள் 1990ஆம் ஆண்டு பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களில் சுமார் 450 குடும்பங்கள் இப்போது மீளத் திரும்பி வந்து குடியேறியுள்ளன.

2007ஆம் ஆண்டு வரையில் விடத்தல்தீவு மீனவர்கள் உப்புக்குளம் அல் அஸ்ஹர் மீனவர் சங்கத்தின் அனுமதியுடன் படகுத் துறையினைப் பயன்படுத்தி வந்தமைக்கும் அதற்காக அவர்கள் கோந்தப்பிட்டி படகுத்துறையில் வாடிகளை உரிமையாகக் கொண்டிருந்த உப்புக்குள முஸ்லிம் மீனவர்களுக்கு மேலும் ஒரு வருட அனுமதியினை மீனவர் சங்கம் வழங்கியது. 2006 ஆனி 15ஆம் திகதி மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் மன்னார் உதவிப்பணிப்பாளர், பாராளுமன்ற உறுப்பினர் செ. அடைக்கலநாதன் ஆகியோர் விடுத்த வேண்டுகோளை அடுத்து விடத்தல்தீவு மீனவர்கள் அவர்களின் படகுகளை மன்னாரிலுள்ள கோந்தப்பிடடி படகுத் துறையில் கட்டுவதற்கு அனுமதிக்கும் கடிதத்தினை இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனம் வழங்கியது.

2006 நவம்பர் 23இல் மன்னார் அரசாங்க அதிபரின் தலைமையில் நடத்தப்பட்ட கூட்டத்தில் பா.உ செல்வம் அடைக்கலநாதன், பிரதேச செயலாளர், மன்னார் மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் உதவிப் பணிப்பாளர், விடத்தல்தீவு மீன்பிடிப் பரிசோதகர்கள், உப்புக்குளம் அல் அஸ்ஹர் மீனவர் சங்கத்தின் பிரதிநிதிகள் மற்றும் உப்புக்குளப் பள்ளிவாசல் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைப் பிரதிநிதிகள் ஆகியோர் முன்னிலையில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

> **“ மன்னார் நகரத்தில் அமைந்துள்ள கோந்தப்பிட்டியிலுள்ள மீன்பிடித் துறைமுகத்தினை உப்புக்குள முஸ்லிம்கள் அவர்கள் வெளியேற்றப்படுவதற்கு முற்பட்ட காலத்திலிருந்து நீண்டகாலமாகப் பயன்படுத்திவந்தனர் என்பதுவும், கோந்தப்பிட்டியிலுள்ள மீன்பிடித் துறைமுகமானது உப்புக்குள மக்களுக்கே பாரம்பரிய ரீதியாகச் சொந்தமானது என்பதுவும் பல்வேறு சிவில் நிர்வாகிகளுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல் மற்றும் நேர்காணல்களிலிருந்து தெளிவாகத் தெரியவந்தது. ”**

வாடகை செலுத்தி வந்தமைக்கும் ஆதாரங்கள் இருக்கின்றன. விடத்தல்தீவு மீனவர்களுக்கும் உப்புக்குளம் அல் அஸ்ஹர் மீனவர் சங்கத்திற்கும் இடையிலான இறுதி ஒப்பந்தம் 2005ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

விடத்தல்தீவு மீனவர்களுக்கு உப்புக்குள மீனவர்கள் வழங்கிய காலம் 2005.06.07இல் முடிவடைந்த காரணத்தினால் விடத்தல்தீவு மீனவர்கள் படகுத் துறையினை விட்டுச் செல்ல வேண்டியேற்பட்டது. இந்த விடயம் தொடர்பாக உப்புக்குளம் அல் அஸ்ஹர் மீனவர் கூட்டுறவு சங்கத்துடன் மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் உதவிப் பணிப்பாளர் பேச்சுவார்த்தை நடத்தி 2005.08.10 வரையில் விடத்தல் தீவு மீனவர்களுக்கு தொடர்ந்தும் துறையினைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதற்காக அனுமதி வழங்கப்பட்டது. பின்னர், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அல் அஸ்ஹர் மீனவர் சங்கத்துடன் அவரது மாவட்ட அலுவலகத்தில் நடத்திய கலந்துரையாடலைத் தொடர்ந்து மீன்பிடிப்பதற்காக

1. கோந்தப்பிட்டி துறை உப்புக்குள மீனவர்களுக்குச் சொந்தமானது. மனிதநேய அடிப்படையில் விடத்தல்தீவு மீனவர் சங்கம் இத்துறையினைப் பயன்படுத்தி மீன் பிடிப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றது.

2. இது தொடர்பாக விடத்தல்தீவு மீனவர் சங்கமும் உப்புக்குளம் அல் அஸ்ஹர் மீனவர் கூட்டுறவுச் சங்கமும் உடன்படிக்கை ஒன்றினை ஏற்படுத்தி அதனை அமுல்படுத்த வேண்டும்.

3. இந்த உடன்படிக்கையானது வருடாந்தம் புதுப்பிக்கப்படல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட உடன்படிக்கை உருவாக்கப்பட்ட போதிலும் இரு தரப்பினரும் இணங்காத சில விடயங்கள் அதில் காணப்பட்டதால் அதில் கைச்சாத்திடப்படவில்லை. எவ்வாறாயினும் விடத்தல்தீவு மீனவர்கள் மீன்பிடிப்பதனை உப்புக்குள மீனவர்கள் தடைசெய்யவில்லை.

உப்புக்குளம் அல் அஸ்ஹர் மீனவர் சங்கத்திடம் தன்னைச் சந்திப்பதற்கு வருமாறு 2006 கார்த்திகையிலும் பின்னர் 2007 தையிலும் எல்.ரி.ரி.ஈ மாவட்டச் செயலகத் தலைவர் பி. அன்புராஜினால் அழைப்பு விடுக்கப்பட்டது. எனினும் அச்சம் காரணமாக சங்கத்தின் தலைவர்கள் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளைச் சந்திக்கவில்லை. அல்அஸ்ஹர் மீனவர் சங்கத்திற்கும் புலிகள் இயக்கத்திற்குமிடையிலான ஒரு சந்திப்பு பிரதேசத்தின் கடற்புலிகளின் தலைவரான அமுதனுடன் 2002ஆம் ஆண்டில் நடைபெற்றது. இச்சந்திப்பின்போது கோந்தப்பிட்டி படகுத் துறையினை தற்காலிகமாக விடத்தல்தீவு மீனவர்களுக்கு வாடகைக்கு விடுவதற்கு மீனவர் சங்கம் இணங்கியது.

யுத்தம் முடிவடைந்ததனைத் தொடர்ந்து உப்புக்குளத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் கணிசமான எண்ணிக்கையில் திரும்பிவரத் தொடங்கியதுடன் தமது படகுத் துறையினை மீண்டும் தமக்கு ஒப்படைக்குமாறும், விடத்தல்தீவு மீனவர்களை திரும்பிச் செல்லுமாறும் கோரிக்கை விடுத்தனர். விடத்தல்தீவு மீனவர்கள் திரும்பிச் செல்ல மறுத்ததனைத் தொடர்ந்து பலரிடமும் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. (உதாரணமாக: 2011 ஆவணி 07ஆம் திகதி கடற்தொழில் அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம், கைத்தொழிற் துறை அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் மற்றும் மன்னார் அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம்)

முறைப்பாடு செய்யப்பட்டதனைத் தொடர்ந்து வந்த பல சந்தர்ப்பங்களில் அரசாங்க அதிபரும் பிரதேச செயலாளரும் மதகுருமாரும் ஒரு மாற்றுத் துறை பெற்றுக் கொள்ளப்படும் வரையில் கோந்தப்பிட்டி துறையில் விடத்தல்தீவு மீனவர்களை அவர்களின் படகுகளைக் கட்டுவதற்கு அனுமதிக்குமாறு உப்புக்குள மீனவர்களிடம தலையிட்டு கோரிக்கை விடுத்தனர். இதேவேளை பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு சிவில் நிர்வாகமும் முயற்சி செய்தது. அரசாங்க அதிபருடனும் மன்னார் பிரதேச செயலாளருடனும் மன்னார் மறை மாவட்டக் குரு முதல்வருடனும் விடத்தல்தீவு கத்தோலிக்க பாதிரியார்களுடனும் பொலிசாரும் மீனவர்களும் பிரசன்னமாகியிருக்கையில் பல கூட்டங்கள் நடத்தப்பட்டன. இந்த விடயம் 2009ஆம் ஆண்டிலிருந்து மூன்று வருடங்கள் இழுத்தடிக்கப்பட்டது. உப்புக்குள மீனவர்கள் உதவிக்காக பல்வேறு அரசாங்க அதிகாரிகளை அணுகினர். அதேபோல் தமக்கு ஒரு நிரந்தரமான மாற்றுத் தீர்வினை வழங்குமாறு கோரி விடத்தல்தீவு மீனவர்களும் பல்வேறு சிவில் அதிகார அமைப்புகளை அணுகினர்.

## அண்மைய வன்முறை தோன்றியதற்கான காரணங்கள்

2012 ஆனி 5ஆம் திகதி துறையினைப் பயன்படுத்துவதை நிறுத்துமாறும் வேறு ஒரு இடத்திற்குச் செல்லுமாறும் உப்புக்குள மீனவர்கள் விடத்தல்தீவு மீனவர்களிடம் கூறினர்.

ஆனி 6ஆம் திகதி விடத்தல்தீவு மீனவர்கள் பொலிசாரிடம் முறைப்பாடு செய்தனர்

ஆனி 7ஆம் திகதி இரு தரப்பினரையும் கூட்டமொன்றிற்காக பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு பொலிசார் அழைத்தனர். இக்கூட்டத்தினைத் தொடர்ந்து, தமக்கு ஒரு நிரந்தரமான தீர்வு வழங்கப்படும் பட்சத்தில் கோந்தப்பிட்டி துறையினைப் பயன்படுத்துவதை நிறுத்துவதாக விடத்தல்தீவு மீனவர்கள் குறிப்பிட்டனர்.

(2012 ஆனி மாதத்தின் ஆரம்பப் பகுதியில் இந்தப் பிரச்சினையானது ஒரு வன்முறையாக மாறக்கூடிய சாத்தியத்தினைப் பொலிசார் துப்பறியும் அறிக்கைகளில் இருந்து அறிந்து கொள்கின்றனர்)

பொலிசாருக்கு காணிகளில் அதிகாரம் இல்லாத காரணத்தினால் விடயமானது அரசாங்க அதிபரிடம் ஆற்றுப்படுத்தப்பட்டது.

2012 ஆனி 11ஆம் திகதி அரசாங்க அதிபருடன் சந்திப்பு-விடத்தல்தீவு மீனவர்களுக்கு எருக்கலம்பிட்டியில் ஒரு மாற்றுக் காணி வழங்கப்பட்டு ஒரு மாதத்தில் அந்த இடத்திற்குச் செல்லுமாறு அவர்களுக்கு கூறப்பட்டது.

ஆனி 15இல் நடத்தப்பட்ட இன்னுமோர் கூட்டத்தில்: கோந்தப்பிட்டியிலிருந்து 48கிமீ தூரத்திலுள்ள கடலில் விடத்தல்தீவு மீனவர்கள் மீன் பிடித்து வந்ததால் விடத்தல்தீவிலுள்ள மூன்றாம்பிட்டியிலுள்ள ஒரு துறையினை மாற்றுத் துறையாக வழங்குவது பற்றிய ஓர் ஆலோசனை முன் வைக்கப்பட்டது. தாம் மீள் குடியேறியுள்ள மன்னார் நகரிலுள்ள ஜோசப் வாஸ் கிராமத்திலிருந்து இந்த மாற்றுத்துறை அமைந்துள்ள தூரத்தினைக் கருத்தில் கொண்ட விடத்தல்தீவு மீனவர்கள் இந்த ஆலோசனையை மறுதலித்தனர்.

26 ஆனி 2012இல் பிரதேசத்திலுள்ள பல மீனவர் சங்கங்களுடன் அரசாங்க அதிபர் கூட்டமொன்றினை நடத்தினார். மூன்று மணித்தியாலங்களினுள் கோந்தப்பிட்டி படகுத்துறையினைப் பயன்படுத்துவதைனை நிறுத்துமாறு SSP கேட்டுக்கொண்டார். மூன்று நாட்கள் வரையில் இக்கால அவகாசத்தினை நீடித்துத் தருமாறு மீனவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். மாற்றுத் தீர்வொன்று



http://www.ft.lk/2012/07/28/protests-for-muslim-idp-justice/

காணப்படும் வரையில் உலர் உணவு வழங்கப்படும் என அரசாங்க அதிபர் வாக்குறுதியளித்தார். இந்தத் தீர்மானத்தினைத் தொடர்ந்து 2012 ஆடி 12 வரை தாம் கடலுக்குச் செல்லப் போவதில்லை என விடத்தல்தீவு மீனவர்கள் தெரிவித்தனர்.

29 ஆனி - 50ற்கும் மேற்பட்ட மீனவர் சங்கங்களுடன் அரசாங்க அதிபர் மற்றுமோர் கூட்டத்தினை நடத்தி அவர்கள் தமது படகுத் துறையினை விடத்தல்தீவு மீனவர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றனரா எனக் கேட்டதற்கு அவர்கள் அனைவருமே மறுத்துவிட்டனர்.

**“ மன்னார்தீவில் வாழ்வது எனத் தீர்மானித்துள்ள விடத்தல்தீவு மீனவர்களின் தீர்மானம் மதிக்கப்படல் வேண்டும். அவர்களது எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றவாறு தமது தொழிலைச் செய்வதற்குப் பொருத்தமான நிரந்தரப் பாடு ஒன்றினை வழங்குவதற்கு சிவில் சமூகம் உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதேவேளை சகல தரப்பினரதும் வாழ்வாதாரங்களுக்கான உரிமைகளும் மதிக்கப்படல் வேண்டும். ”**

ஒரு மாதம் முடிவடைந்ததன் பின்னர் தமக்கு வழங்கப்பட்டுள்ள புதிய இடம் சேறு நிறைந்ததாக இருப்பதாகவும் தாம் தமது படகுகளுடன் அங்கே செல்வதற்கு ஒரு வடிகால் அமைத்துத் தரப்படல் வேண்டும் எனவும் விடத்தல்தீவு மீனவர்கள் கோரிக்கை விடுத்தனர். இதனைச் செய்து தருவதற்கு இணங்கிய அரசாங்க அதிபர் மீள் குடியேறுவதற்கு விடத்தல்தீவு மீனவர்களுக்கு மூன்று நாட்களை வழங்கினார். ஆனால் இது தமக்கு எழுத்தில் வழங்கப்படவில்லை என விடத்தல்தீவு மீனவர்கள் குறிப்பிட்டனர்.

ஆடி 11 வரையில் கடலுக்குச் செல்வதில்லை எனத் தீர்மானித்த விடத்தல்தீவு மீனவர்கள் தமது கஷ்டநிலை காரணமாக ஆடி 12 மற்றும் 13ஆம் திகதிகளில கோந்தப்பிட்டித் துறையினைப் பயன்படுத்திக் கடலுக்குச் செல்லத் தீர்மானித்தனர். இந்த இரண்டு நாட்களிலும் இந்த விடயத்தினை உப்புக்குள மீனவர்கள் சிவில் நிர்வாகத்திடமும் பொலிசிடமும் முறைப்பாடு செய்தனர்.

இதே வேளை ஆடி 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொழுகையின் பின்னர் துறையில் தமிழ் மீனவர்கள் பயன்படுத்திவந்த சில குடிசைகளை உப்புக்குள மீனவர்கள் சேதப்படுத்தினர். இச்சம்பவத்தினைத் தொடர்ந்து 17 தமிழ் மீனவர்கள் முஸ்லிம் மீனவர்களுக்கெதிராக குற்றம் சாட்டினர். இத்தாக்குதலால் தமக்கு 16 லட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்(இந்த அறிக்கையினைத் தயாரித்தவர்கள் குறிப்பிட்ட இடத்தினைப் பரிசீலித்தனர் - விடத்தல்தீவு மீனவர்களுடன் நடத்திய பேச்சவார்த்தைகளைத் தொடர்ந்து புரிந்து கொள்ளப்பட்டது என்னவெனில் சொற்பமான பழைய ஓலைக் குடிசைகளும் பிரதான குடில்களின் கூரைகளும் மட்டுமே சேதமேற்பட்டிருக்கின்றது என்பதாகும்).

ஆடி 16ஆம் திகதி இவ்விடயமானது நீதவான் நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது. மாற்று இடம் ஒன்று வழங்கப்படும் வரையில் கோந்தப்பிட்டி துறையினைத் தமிழ் மீனவர்கள் பயன்படுத்த வேண்டும் என நீதவான் கட்டளை பிறப்பித்தார். துறையில் பொலிசாரும் காவலுக்கு நிறுத்தப்பட்டனர். நீதிமன்ற வளாகத்தின் முன்பாக உப்புக்குள மக்கள் ஓர் அமைதியான போராட்டத்தினை நடத்தினர்.

விடயமானது மீண்டும் SSP யினால் நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆடி 18இல் ஆஜராகுமாறு சகல தரப்பினருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. இந்த விடயம் தீர்க்கப்படும் வரை எந்தவித ஆர்ப்பாட்டங்களோ சட்டவிரோத ஒன்று கூடல்களோ அல்லது போராட்டங்களோ நடத்தப்படக்கூடாது எனக் கட்டளை பிறப்பிக்குமாறு நீதவானிடம் SSP கோரிக்கை விடுத்தார். ஒரு மூன்றாம் தரப்பு என்ற ரீதியில் ஆவணி 7ஆம் திகதிக்கு முன்னர் ஒரு மாற்று இடத்தினை ஏற்பாடு செய்யுமாறு அரசாங்க அதிபரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. 2012

ஆவணி 06ஆம் திகதி அரசாங்க அதிபரும் பிரதேச செயலாளரும் மூன்று தெரிவுகளுடன் ஓர் அறிக்கையினை நீதிமன்றத்திற்குச் சமர்ப்பித்தனர்:

- தாவடி - தள்ளாடி இராணுவ முகாமிற்கு அருகிலுள்ள இடம். கோந்தப்பிட்டி துறையிற்கான அதே அளவு தூரம் (நங்கூர வசதிகளுடன் கால்வாயும் வீதியும் அமைத்துக் கொடுக்கப்படும்)
- நாயாற்றுவெளி – A32 நெடுஞ்சாலையும் உயிலங்குளம் வீதியும் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ளது. (கடற்கரைக்கான உள்வீதி நிர்மாணிக்கப்படும்)
- தலைமன்னார் பியர் (இடம்பெயர்ந்துள்ள மீனவர்கள் அவர்களின் படகுகளைக் கட்டுவதற்கு தற்போது ஒதுக்கப்பட்டுள்ளது)

## ஆர்ப்பாட்டம்:

முஸ்லிம்கள் நடத்திய ஆர்ப்பாட்டம் 2012 ஆடி 16 மற்றும் 18 ஆகிய இரு தினங்களில் நீதிமன்ற வளாகத்தின் முன்பாக நடைபெற்றது. 18ஆம் திகதி நடைபெற்ற ஆர்ப்பாட்டம் வன்முறை மிக்கதாக மாறியது. நீதிமன்றத்தின் முன் குழுமிய சுமார் 600 மக்கள் சுமார் இரண்டரை மணித்தியாலங்கள் வீதியினை மறித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆர்ப்பாட்டத்தில் ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் பங்குபற்றியதாக எமக்குக் கூறப்பட்டது. மேலும் ஏனைய கிராமங்களைச் சேர்ந்த முஸ்லிம்களும் ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றினர். இது ஓர் இயல்பான ஒன்றுகூடலல்ல. ஆர்ப்பாட்டம் கலவரத்தன்மை மிக்கதாக மாறியது. மக்கள் கோசங்களை எழுப்பத் தொடங்கினர். நீதவானுக்கு எதிராக சுலோகங்களும் தாங்கப்பட்டிருந்தன.

கூட்டத்தினைக் கலைப்பதற்காகத் தாம் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்ததாகப் பொலிசார் தெரிவித்தனர். தாம் தாக்கப்பட்டதாக, குறிப்பாக பெண்களும் சிறுவர்களும் தாக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டது. கூட்டத்தினைக் கலைத்த பின்னர் மக்கள் பொலிசாரினால் கண்டபடி கைது செய்யப்பட்டனர். ஆடி 31 ஆம் திகதி நடைபெற்ற மற்றுமோர் விசாரணையின் போது 13 சந்தேக நபர்களையும் மேலும் 16 நாட்களுக்குத் தடுத்து வைக்குமாறு நீதவான் ஜுட்சன் கட்டளையிட்டார். மேலும் 31 சந்தேக நபர்களில் 27 ஆர்ப்பாட்டக்காரர்களை கைது செய்வதற்கும் நீதவான் ஆணை பிறப்பித்தார். கிராமத்தினைச் சேர்ந்த முஸ்லிம் ஆண்கள் அன்றிலிருந்து தலைமறைவாகத் தொடங்கினர்.

உப்புக்குளம் கிராமத்தில் இராணுவம் பிரசன்னமாகியிருப்பதை நாம் அவதானித்தோம். தலைமறைவாகியுள்ள தமது ஆண்களைத் தேடிவரும் பொலிசார் தம்மைத் துன்புறுத்துவதாகப் பெண்கள் குறிப்பிட்டனர். இந்த ஆண்களே குடும்பங்களைப் பராமரிப்பவர்கள் என்கின்ற காரணத்தினால் பல குடும்பங்கள் மிகவும் கஷ்ட நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன. கிராமம் வெறிச்சோடிக் காணப்பட்டது. தமது ஆண்கள் தலைமறைவாகியுள்ளதனால் தமது வாழ்வாதாரம் ஸ்தம்பித்து தாம் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகியுள்ளதாகப் பெண்கள் தெரிவித்தனர். தமது தேவைகளைக் கவனிக்க கணவன்மார் இல்லாத காரணத்தினால் நோன்பு நோற்பதற்கு முன் ஒரு வேளை உணவினைக் கூட உண்ண வழியில்லாமல் இருப்பதாகப் பல பெண்கள் குறிப்பிட்டனர். நாம் விஜயம் செய்வதற்கு முதல் நாள் கிராமத்தினைச் சுற்றி வளைத்த பொலிசார் தாம் நாளாந்தம் பயன்படுத்தும் குளத்திலிருந்து கைக்குண்டொன்றினைக் கண்டுபிடித்ததாக மக்கள் குறிப்பிட்டனர். தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக கிராமத்தினுள் வருவதற்காக பொலிசார்தான் இக்குண்டினை அங்கே வைத்திருக்க வேண்டும் எனச் சந்தேகிப்பதாகப் பெண்கள் தெரிவித்தனர்.

## முடிவுகள்:

இந்தப் பிரச்சினை உச்சக்கட்டத்தினை அடைவதற்கான அடிப்படைக் காரணம் தாம் மன்னாரில் நியாயமில்லாமல் நடத்தப்படுவதுதான் என முஸ்லிம்கள் கருதுகின்றனர். சிவில் பொறிமுறைகளினூடாகத் தாம் ஓரங்கட்டப்படுவதாக ஒரு புலனுணர்வு அவர்கள் மத்தியில் நிலவுகின்றது. நீதிமன்றத்தில் பல காணி சம்பந்தப்பட்ட வழக்குகள் தேங்கியுள்ள நிலையில் ஒரு பக்கச்சார்பற்ற விசாரணை நடைபெறுமா என்பதையிட்டு முஸ்லிம்கள் அச்சமடைந்துள்ளனர் (குறிப்பாக இச் சம்பவத்தின் பின்னர்). இவ்வகையாக ஓரங்கட்டப்படுவதாக உணர்வதைக் களைவதற்கான தேவை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு இருக்கின்றது.

மன்னார்தீவில் வாழ்வது எனத் தீர்மானித்துள்ள விடத்தல்தீவு மீனவர்களின் தீர்மானம் மதிக்கப்படல் வேண்டும். அவர்களது எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றவாறு தமது தொழிலைச் செய்வதற்குப் பொருத்தமான நிரந்தரப் பாடு ஒன்றினை வழங்குவதற்கு சிவில் சமூகம் உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதேவேளை சகல தரப்பினரதும் வாழ்வாதாரங்களுக்கான உரிமைகளும் மதிக்கப்படல் வேண்டும்.

---

*நன்றி : வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் தொடர்பாக ஆராயும் பிரஜைகள் குழு*



# அரசியல் கைதிகள், தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் மற்றும் காணாமல் போனோர்

வடக்கிலும் கிழக்கிலும் வாழும் பெண்கள் எதிர்நோக்குகின்ற ஒரு முக்கியமான பிரச்சினை, காணாமல் போயுள்ளவர்கள் பற்றியதாகும். பல பெண்களின் கணவன்மார், மகன்மார், மகள்மார் மற்றும் ஏனைய குடும்ப உறுப்பினர்கள் தொடர்பானதாகும். கடந்த மூன்று தசாப்தங்களாக அரசும் இராணுவ செயற்படுனர்களும் கடத்தல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறு காணாமல் போனவர்களின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் அமைந்திருக்கின்றது. சர்வதேச சட்டத்தின் கீழ் அரசு ஒன்று நபரொருவரைக் கைதுசெய்து அவரைத் தடுத்து வைத்திருப்பதை மறுத்தோ அல்லது அவர் எங்கே வைக்கப்பட்டிருக்கின்றார் என்பது பற்றிய தகவல்களைத் தரமறுத்தோ செயற்படுகையில் அந்நபரை வலிந்து காணாமல் போகச் செய்கின்ற குற்றத்தினை அது இழைக்கின்றது. காணாமல் போகின்ற நபர்கள் பொதுவாக சித்திரவதைக்கோ அல்லது அநீதியான மரணதண்டனைகளுக்கோ உள்ளாகின்றனர். அத்துடன் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் தொடர்ச்சியாகத் துயரப்படவும் இது காரணமாக அமைந்துவிடுகின்றது. வலிந்து மேற்கொள்ளப்படும் காணாமல் போதலானது தொடர்ந்து நடைபெற்று வருகின்ற உரிமை மீறலாக இருந்து வருகின்றது.

காணாமல் போன நபரின் தலைவிதி என்ன அல்லது அவர் எங்கே இருக்கின்றார் என்பது தெரியும் வரையில் இதுவொரு தொடர்கதையாக இருந்து வருகின்றது. கடந்த யுத்தத்தின் இறுதிக் கட்டங்களின் போது தமிழ் மக்கள் காணாமல் போனமை, தடுத்து வைக்கப்பட்டமை மற்றும் கைது செய்யப்பட்டமை எண்ணற்ற அளவில் இடம்பெற்றிருக்கின்றது. இலங்கையில் காணாமல் போனவர்களில் பெரும்பான்மையானோர் ஆண்களாக இருக்கின்றனர். எவ்வாறாயினும் இதனால் பாதிக்கப்பட்டவர்கள் இவர்கள் விட்டுச்செல்கின்ற நபர்களாக, குறிப்பாகப் பெண்களாக இருக்கின்றனர். தமது குடும்ப உறுப்பினர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கான எந்தவிதமான முறைமையினையும் இவர்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் தவறிவிட்டது. தற்போதைய கவனக் குவிப்பானது யுத்தத்தின் கடைசி மாதங்களில் என்ன நடந்தது என்பதிலேயே இருக்கையில், கடந்த இரண்டு தசாப்த காலங்களாக இவ்வாறான சம்பவங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதைப் பற்றி அறிவதற்கு காத்துக் கொண்டிருக்கின்றனர்.

இறுதியில் விடுவிக்கப்பட்ட பல தடுப்புக் கைதிகள் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் சித்திரவதைக்கு உள்ளாகியிருக்கின்றனர். தடுத்து வைக்கப்பட்டு இறுதியில் புதிய மீள்குடியேற்றப் பிரதேசங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ள பெண்களும் முறைமை வாய்ந்த வகையில் துன்புறுத்தலுக்கு உள்ளாகியிருக்கின்றனர். இவர்கள் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்பட்டு வருவதுடன் இயல்பு வாழ்க்கையினை வாழ முடியாதவர்களாக இருக்கின்றனர். இவ்வகையான கண்காணிப்புடன் சேர்த்து துன்புறுத்தல் என்கின்ற கலாசாரம் இடம்பெறுவது முக்கியமானதாக இருக்கின்றது. பெண்களைப் பொறுத்தளவில் அவர்களுக்கு மேலதிக பிரச்சினைகள் காணப்படுகின்றன. முன்னாள் பெண் போராளிகள் மற்றும் ''சந்தேகத்தின் கீழோ, அவசரகாலச் சட்டத்தின் கீழோ அல்லது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழோ'' கைது செய்யப்பட்ட பெண்கள் இராணுவ முகாம்களுக்கு வந்து அறிக்கையிடுமாறு தொடர்ச்சியாகக் கோரப்படுகின்றனர். அதிகமான

சந்தர்ப்பங்களில் இராணுவ ஆளணியினர் இவர்கள் மீது பாலியல் ரீதியான நகர்வுகளை மேற்கொள்கின்றனர் அத்துடன் இவற்றிற்கு சம்மதிக்க மறுக்கின்ற பெண்கள் அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாகி வருகின்றனர். அதிகரித்த இராணுவப் பிரசன்னமும் இந்தப் பெண்கள் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்படுகின்றமையும் இவர்களைப் பாரிய இக்கட்டுக்கு உள்ளாக்கியுள்ளது.

சில பெண்கள் இன்னும் தடுப்புக் காவலிலேயே இருக்கின்றனர். அவர்கள் புனர்வாழ்விற்கு அனுப்பப்பட்டு அவர்களுடைய புனர்வாழ்வுக் காலம் முடிவடைந்த பின்னரும் தடுப்புக்காவலிலேயே இருக்கின்றனர். முன்னாள் போராளிகள் நீதி முறைமையின் முன் நிறுத்தப்படுவதில்லை. இவர்களுக்கு நீதியானதும் நியாயமானதுமான விசாரணைகள் நடத்தப்படுவதில்லை. இவர்கள் வெறும் சந்தேகத்தின் பேரிலே நேரடியாக புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். இது சட்டச் செயன்முறைக்கு புறம்பானதாக இருப்பதுடன் இதனை நீதிமன்றத்திலே சவாலுக்கு உட்படுத்தவும் இச்செயன்முறை அனுமதிப்பதில்லை. இலங்கை அரசாங்கமானது அதன் புனர்வாழ்வுச் செயல்விதிகளை வெளிப்படுத்தவும் இல்லை. அரசாங்கமானது தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிப்பதாகக் குறிப்பிடுகின்ற போதிலும் அது கூறுகின்ற எண்ணிக்கையில் அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் விடுவிக்கப்படுவதில்லை என மன்னாரைச் சேர்ந்த செயற்படுனர் ஒருவர் தெரிவித்தார். தடுத்து வைக்கப்பட்ட 700 பேர்களில் கடந்த முறை உண்மையிலே 358 பேர் மட்டுமே விடுவிக்கப்பட்டனர் என்பதை நாம் அறிவோம். குற்றம் சுமத்தப்படாமலும் சான்றுகள் இல்லாமலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிக்குமாறு பல தடவைகள் விண்ணப்பித்துள்ள போதிலும் இது தொடர்பாக பதிற்செயற்பாடு ஆற்றுவதில் அரசாங்கம் அசமந்தமான போக்கினையே காட்டிவருகின்றது. அரசாங்கம் அதன் சிறைகளிலும் முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரினதும் விபரங்கள் அடங்கிய பூரணமான பட்டியல் ஒன்றினை வெளியிடுவதற்கு மறுத்து வருகின்றது. குடும்ப உறுப்பினர்கள் தவிர்ந்த வேறு மக்களுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் உறுதியான ஒரு பட்டியலை வெளியிடுவதற்கு அரசாங்கம் மறுத்து வருவதானது அரச தடுப்புக்காவலின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் மற்றும் அரசியல் கைதிகளின் உண்மையான எண்ணிக்கையினை மறைக்கும் நோக்கத்திலேயே மேற்கொள்ளப்படுகின்றது. இலங்கையின் மாக்சிச கட்சியான JVP ஆனது 4700 முதல் 5200 வரையிலான அரசியல் கைதிகள் தடுப்புச் சிறையில் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது. இவர்களில் பெரும்பான்மையானோர் தமிழர்கள் எனவும் அது குறிப்பிட்டுள்ளது.

எந்தவிதமான குற்றப் பத்திரிகையும் தாக்கல் செய்யப்படாமல் பெண்கள் கைது செய்யப்பட்டு நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள பல சம்பவங்கள் காணப்படுகின்றன. அடிப்படை உரிமை மனுவினைத் தாக்கல் செய்த பின்னரே இவர்கள் விடுவிக்கப்படுகின்றனர். வெறும் சந்தேகத்தின் பேரிலே இந்தப் பெண்கள் சிறைகளிலே சித்திரவதையினையும் மனிதாபிமானமற்ற நடத்தையினையும் சந்தித்திருக்கின்றனர். மக்களைக் கட்டுப்படுத்துவதற்கும் அவர்களைத் துன்புறுத்தவதற்கும் கைதுகளும் தடுப்புக் காவல்களும் பயன்படுத்தப்படுவதில்லை என்பதை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும். மேலும் தடுத்து வைக்கப்படுபவர்களின் பாதுகாப்பு சகல சந்தர்ப்பங்களிலும் உறுதிப்படுத்தப்படுகின்றது என்பதையும் இது உரிய முறையிலே மேற்கொள்ளப்படுகின்றது என்பதையும் அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும். முறைமை ஒன்றின் ஊடாகவே தவறு செய்வோர் தண்டிக்கப்படல் வேண்டும். சட்ட ஆலோசனையினைப் பெறுவதென்பது இலங்கையிலே மிகவும் செலவுமிக்க ஒரு பணியாக இருக்கின்றது. சட்ட உதவியைக் கோருவதற்கான நிதி பல பெண்களிடம் இல்லாமல் இருப்பதுடன் தமக்கு சட்ட உதவிக்கான உரிமை இருக்கின்றது என்பதையும் பல பெண்கள் அறியாமல் இருக்கின்றனர். இந்தக் காரணத்தினால் பல பெண்கள் சிறையில் அல்லலுறுகின்றனர். எனவே தமக்கு எதிராக எந்தவிதக் குற்றச்சாட்டும் இல்லாத பெண்களை உடனடியாக விடுவிப்பதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். .

## கைது செய்தலும் தடுத்து வைத்தலும்

### திருமகள் மக்ஸ்மிலன் வழக்கு

தெஹிவளை குண்டுவெடிப்பு சம்பவத்தின் காரணமாக திருமகள் மக்ஸ்மிலன் கைது செய்யப்பட்டார். தாக்குதலை நடத்துவதற்காக தற்கொலைக் குண்டுதாரி கொழும்புக்கு வந்த சமயம் திருமகளின் கணவர் அந்தத் தற்கொலைக் குண்டுதாரிக்குத் தங்குமிட வசதி வழங்கியிருந்தார். இவ்வாறு வாடகைக்கு அறையை விடுவதாக கணவர் எடுத்த தீர்மானத்திலே திருமகள் தலையிடுவதற்கான அதிகாரம் இருக்கவில்லை. அல்லது தற்கொலைக் குண்டுதாரி ஒரு தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்துவதற்குத்தான் கொழும்புக்கு வந்திருக்கின்றார் என்பதைத் திருமகளின் கணவர் அறிந்திருக்கவில்லை. திருமகள் ஒரு


http://jdsrilanka.blogspot.com/2010_08_02_archive.html

> **“ சில பெண்கள் இன்னும் தடுப்புக் காவலிலேயே இருக்கின்றனர். அவர்கள் புனர்வாழ்விற்கு அனுப்பப்பட்டு அவர்களுடைய புனர்வாழ்வுக் காலம் முடிவடைந்த பின்னரும் தடுப்புக்காவலிலேயே இருக்கின்றனர். முன்னாள் போராளிகள் நீதி முறைமையின் முன் நிறுத்தப்படுவதில்லை. இவர்களுக்கு நீதியானதும் நியாயமானதுமான விசாரணைகள் நடத்தப்படுவதில்லை. இவர்கள் வெறும் சந்தேகத்தின் பேரிலே நேரடியாக புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். ”**

குழந்தையின் தாயாவார். அவருடைய கணவரும் இந்த வழக்கிலே குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றார். இத்தம்பதியினர் கைது செய்யப்பட்ட போது திருமகள் கர்ப்பமாக இருந்தார். தடுத்து வைக்கப்பட்ட வேளையிலேயே திருமகள் பிள்ளையினைப் பெற்றெடுத்தார். பல வருடங்களின் பின் மனிதநேய அடிப்படையில் குழந்தையானது விடுதலை செய்யப்பட்டு இப்போது இவர்களின் பெற்றோரினால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. திருமகள் கடுமையான மன உளைச்சலினாலும் மன அதிர்ச்சி வடுவினாலும் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. இவர் கடந்த 14 வருடகாலமாக சிறையில் இருக்கின்றார்.

**வசந்தி ரகுபதி** சட்டவிரோத செயற்பாடுகளுக்கு உதவினார் என்ற சந்தேகத்தின் பேரில் இவர் கைதுசெய்யப்பட்டார். திரு. ரகுபதி சர்மாவும் அவருடைய மனைவி வசந்தி ரகுபதி சர்மாவும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினால் 2000.02.09ஆம் திகதி அவருடைய கோயில் வாசஸ்தலத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டனர். இதன்பின்பு இவர்கள் நகர சபைக் குண்டுவெடிப்புச் சம்பவத்துடன் தொடர்புபடுத்தப்பட்டனர். திருமதி. ரகுபதி சர்மா தற்போது வெலிக்கடையில் உள்ள பெண்கள் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். திரு. ரகுபதி சர்மா களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவர்களுடைய குழந்தைகளை மட்டக்களப்பில் உள்ள இந்து அநாதைகள் இல்லம் பராமரித்து வருகின்றது.

**ஜயசுமித்ராவின்** மகன் 2008ஆம் ஆண்டு தடுத்து வைக்கப்பட்டார். இவருடைய புனர்வாழ்வுக் காலம் முடிவடைந்த போதிலும் இவர் இன்னும் விடுவிக்கப்படவில்லை. இவருடைய மகன் விடுவிக்கப்படப்போவதாக அரசாங்க உத்தியோகத்தர்கள் நான்கு முறை அறிவித்த போதிலும் அவர் அதற்காகச் சென்றபோது அவர் விடுவிக்கப்படமாட்டார் எனக் கூறப்பட்டிருக்கின்றது.

தடுத்து வைக்கப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்படுகின்றவர்களை முகாம்களுக்கு வருமாறும் இராணுவத்தினர் நடாத்துகின்ற கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறும் தொடர்ச்சியாகக் கூறப்படுகின்றது. தடுத்து வைக்கப்பட்டுள்ளவர் ஆணாக இருப்பின் அவரால் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாது. அதிகமான சந்தர்ப்பங்களில் அவருடைய மனைவியோ அல்லது தாயாரோதான் அவரின் சார்பில் கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

## சித்திரவதை

மன்னாரைச் சேர்ந்த 34 வயதுடைய ரோஷனி வெள்ளை வானில் வந்த இராணுவத்தினரால் 2008ஆம் ஆண்டு கடத்தப்பட்டார். இவரை பயங்கரவாத விசாரணைப் பிரிவு அமைந்துள்ள 4ஆம் மாடிக்கு அழைத்துச் சென்று சித்திரவதைக்கு உள்ளாக்கினர். இவரை எல்.ரீ.ரீ.ஈ உடன் இருந்தவர் என ஏற்றுக் கொள்ளுமாறு பலவந்தப்படுத்தினர். எவ்வாறாயினும், சித்திரவதைகளைத் தாங்கிக் கொண்ட இவர் தான் எல்.ரீ.ரீ.ஈ. உறுப்பினர் என ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். சித்திரவதைகளைத் தாங்கிக் கொள்ளக் கூடிய சக்தி பெற்றவர்கள் எல்.ரீ.ரீ.ஈ. போராளிகள் மாத்திரமே என்கின்ற காரணத்தைக் காட்டி விசாரணையாளர்கள் அவரை மீண்டும் மீண்டும் சித்திரவதை செய்தனர். பெற்றோலினால் நிரப்பப்பட்ட பொலித்தீன் பையினை அவருடைய தலையிலே கட்டி அவரை அடித்தனர். அவரது கால் விரல்களினால் அவரை நிற்கவைத்து அவரது கைவிரல்களை மேலே கட்டி மணித்தியாலக் கணக்கில் அவரை அவ்வாறு நிற்க வைத்தனர். அவரினால் அவரது கால்களை நிலத்தில் வைக்கவோ அல்லது கைகளைக் கீழே விடவோ முடியவில்லை. அதன் பின்னர் அவர் பூசா முகாமுக்கும் அதனைத் தொடர்ந்து வெலிக்கடைச்

சிறைச்சாலைக்கும் அனுப்பப்பட்டார். மொத்தமாக 2 வருடங்களைச் சிறையில் கழித்த இவருக்கு எதிராக எவ்வித குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படவில்லை. 2010ஆம் ஆண்டிலே இவர் விடுவிக்கப்பட்ட போது இவருக்கு நட்டஈடு வழங்கப்படவுமில்லை. வருடக்கணக்காக பெண்கள் சிறையில் அல்லலுறுவதாக இவர் குறிப்பிட்டார். சில பெண்கள் அவர்களினால் சித்திரவதைகளை இனிமேலும் தாங்கமுடியாத காரணத்தினால் தாம் எல்.ரீ.ரீ.ஈ உறுப்பினர்கள் என ஏற்றுக்கொண்டதாக இவர் குறிப்பிட்டார்.

வவுனியா முகாமிலே தனது கணவருடன் இருக்கையில் 34 வயதுப் பெண்ணொருவர் 21.07.2009இல் கைது செய்யப்பட்டார். கைது செய்தவர்கள் தன்னை அடித்ததாகவும், தன்னை மோசமாகச் சித்திரவதை செய்ததனால் தான் தனது கண்ணின் ஒரு பார்வையை இழந்துவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். அவர் குறிப்பிடுகையில், "என்னை அவர்கள் ஒரு நாயைப் போல நடாத்தினார்கள். இறுதியாக நான் விடுவிக்கப்பட்டேன். ஆனால் எனது கணவர் இன்னமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். விடுவிக்கப்பட்டது மோசமாக இருக்கின்றது. ஏனெனில், ஒவ்வொரு நாளும் இராணுவத்தினர் முகாமுக்கு வருமாறு என்னை அழைக்கின்றனர். எனது வீட்டுக்கு வரலாமா? எனக் கேட்கின்றனர். என்னை அவர்கள் தங்களுடைய இன்பத்துக்காக ஒரு விளையாட்டுப் பொருள் போல் பயன்படுத்துகின்றனர். எனக்கு எந்தவித உதவியும் இல்லையென்பதை அவர்கள் அறிந்துகொண்டே இவ்வாறு செய்கின்றனர். முல்லைத்தீவினைச் சேர்ந்த சாந்தி தடுத்து வைக்கப்பட்டு தடுப்புக்காவலில் இருக்கும்போது பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார். சாந்தி போன்ற பெண்கள் குற்றம் நிகழ்த்தியோரை அச்சம் காரணமாகச் சட்டத்தின் முன் கொண்டுவரப் பயப்படுகின்றனர். தடுப்புக் காவலில் இருக்கையில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பல பெண்கள் தமது பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை. மேலும் அதிகமான சந்தர்ப்பங்களில் இப்பெண்கள் கருத்துகளைத் தெரிவிக்க முன்வர விரும்பவும் இல்லை.

## காணாமற்போதல்

### மலர் குறூஸ்

மலர்குறூஸின் சகோதரர் கைது செய்யப்பட்டதாகவும், அவரைத் தன்னால் கண்டுபிடிக்க இயலாமலிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். அவர் 2006ஆம் ஆண்டு கொழும்பில் வைத்துக் கைது செய்யப்பட்டபோது அவரைக் கைது செய்தவர்கள் தாம் பயங்கரவாத விசாரணைப் பிரிவைச் சேர்ந்தவர்கள் எனக் கூறிக்கொண்டனர். எவ்வாறாயினும், பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு அடுத்த நாள் சென்ற மலரிடம் அவ்வாறு யாரையும் தாம் கைது செய்யவில்லையென அவர்கள் குறிப்பிட்டனர். அதன் பின்னர் கைது செய்யப்பட்டவர்கள் வேறு வேறு பெயர்களில் பல்வேறு முகாம்களில் அல்லலுறுவதாக விடுவிக்கப்பட்ட ஒருவரின் மூலம் அவர் அறிந்து கொண்டார். மலரின் சகோதரனின் பெயர் விக்டர் குறூஸ். இவரின் பெயர் அலன் என மாற்றப்பட்டுள்ளது. இது தடுத்து வைக்கப்பட்டவர்களை அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் கண்டுபிடிக்கக்கூடாது என்பதற்காக அரசாங்க உத்தியோகத்தர்கள் பயன்படுத்துகின்ற ஒரு நடைமுறையென அவர் குறிப்பிட்டார். இன்றுவரையில் மலரினால் தனது சகோதரனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர் பின்வருமாறு குறிப்பிட்டார். "எங்களை வவுனியாவுக்கு வருமாறும் அங்கே காணாமற் போனவர்கள் அல்லது தடுத்து வைக்கப்பட்டவர்களைப் பதிவு செய்யுமாறும் கோரினர். நாங்கள் வவுனியாவுக்குச் சென்று எமது சகல விபரங்களையும் ஓர் உத்தியோகத்தரிடம் கூறினோம். அவர் தன்னைப் பின்பு அழைக்குமாறு குறிப்பிட்டார். நான் அவரை அழைத்தபோது அடுத்த வாரமளவில் எம்மை வருமாறு குறிப்பிட்டார். நான் அடுத்த வாரம் சென்றபொழுது அவர் தகாத முறையில் என்னுடன் நடந்து கொண்டார். அத்துடன் என்னிடம் பணத்தையும் கோரினார். என்னைப் போன்ற பெண்கள் சகல கோணங்களிலிருந்தும் இவ்வாறான துயரங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலையே காணப்படுகின்றது".

யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்த 33 வயதுடைய பெண்மணியொருவர் எவ்வாறு தனது கணவர் வெள்ளை வேனில் வந்தவர்களினால் 2006ஆம் ஆண்டு கடத்தப்பட்டார் என்பதைக் குறிப்பிட்டார். அவரை ஒவ்வொரு முகாம்களிலும் தேடிய அவர் கடைசியில் அவரது கணவரைக் கண்டுபிடிக்க இயலாதவராகிவிட்டார். ஈற்றிலே அமைச்சர் ஒருவரின் மூலமாக அவர் ஜனாதிபதியினைச் சந்தித்தார். ஜனாதிபதியைச் சந்தித்த அனுபவத்தை அவர் இவ்வாறு குறிப்பிடுகின்றார்: "அது அவருக்கு ஒரு வேடிக்கையாக இருந்தது. பல பெண்கள் அழுதுகொண்டு சோகத்தில் நடந்தவற்றைக் கூறுகையில் அவரோ இனிப்புகளைச் சாப்பிட்டுக் கொண்டு, கூறப்பட்ட அனைத்தையுமே மறுத்துக் கொண்டிருந்தார். அவர் சிரித்துக் கொண்டிருந்தார், நாங்கள் அழுது கொண்டிருந்தோம்."

## வள்ளிமதி

என்னுடைய மகன் 2008ஆம் ஆண்டிலிருந்து காணாமற்போயுள்ளார். அவர் எங்கேயிருக்கிறார் என்பதைப் பற்றி நாங்கள் அறியாமல் இருக்கிறோம். என்னுடைய கணவர் என்னைக் கைவிட்டுச்

சென்றுவிட்டார். என்னுடைய மகளின் கணவரும் கடந்த 4 வருடங்களாகத் தடுப்புக் காவலில் இருக்கின்றார். திடீரென எமது அனைத்து உதவிகளும் அற்றுப்போன நிலையிலே நாங்கள் இருக்கின்றோம்.

32 வயதுடைய பெண்மணியொருவரின் கணவர் 2006ஆம் ஆண்டு வெள்ளை வேனில் வந்தவர்களால் கடத்தப்பட்டார். துவக்குகளைச் சுமந்து வந்து கடத்தியோர் அடுத்த நாள் வவுனியாவிலுள்ள யோசப் முகாமுக்கு வருமாறு அவரை அழைத்தனர். எவ்வாறாயினும் அவர் அங்கே சென்றபோது அவ்வாறான ஒருவர் கடத்தப்படவில்லையென அவர்கள் குறிப்பிட்டனர். "என்னுடைய 3வது மகனுக்கு அவருடைய அப்பாவையே தெரியாது. நான் என்னுடைய சகோதரருடன் வாழ்ந்து வருகின்றேன். எங்கள் அனைவரையும் பராமரிப்பது அவருக்கு மிகவும் சிரமமாகவுள்ளது. எமது வீட்டுக்கு அண்மையிலுள்ள கடைகளுக்கு நான் உணவுகளைச் சமைத்து விற்று எனது பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்தி, அவர்களைப் பராமரித்து வருகின்றேன்."

## கோரிக்கைகள்

இலங்கை முழுவதிலுமுள்ள பல்வேறு முகாம்களிலும் சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரினதும் பெயர்ப்பட்டியலினை வெளியிடுமாறும் எந்தவித குற்றச்சாட்டுமில்லாமல் சிறையில் அல்லலுறுபவர்களை உடனடியாக விடுதலை செய்வதற்கு நடவடிக்கையெடுக்குமாறும் நாம் இலங்கை அரசாங்கத்திடம் கோருகின்றோம்.

இலங்கை அரசாங்கமானது சித்திரவதைக்கு எதிரான சமவாயத்தை ஏற்று அங்கீகரித்துள்ள காரணத்தினால், கைது செய்யப்பட்டவர்களையும் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களையும் சித்திரவதை செய்வதை உடனடியாக நிறுத்துமாறும், சித்திரவதை செய்யப்பட்ட அனைவருக்கும் நட்டஈடு வழங்குமாறும் நாம் கோருகின்றோம்.

பல வருடமாக சிறையில் வாடுகின்ற கைதிகளின் வழக்குகளைத் துரிதப்படுத்துமாறும் நாம் இலங்கை அரசாங்கத்திடம் கோருகின்றோம்.

தடுப்புக் காவலில் இருக்கையில், தடுத்து வைக்கப்பட்டுள்ள பெண் கைதிகளும், தடுத்து வைக்கப்பட்டுள்ள பெண்களும், பெண் சிறைக்கைதிகளும் எவ்விதமான பாலியல் தாக்குதலுக்கோ பாலியல் வல்லுறவுக்கோ அல்லது சித்திரவதைக்கோ உள்ளாகவில்லை என்பதை உறுதிப்படுத்துமாறு நாங்கள் இலங்கை அரசாங்கத்திடம் கோருகின்றோம்.

காணமாற்போனவர்களின் குடும்பத்திற்குத் தேவையான நட்டஈட்டினை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு நாங்கள் இலங்கை அரசாங்கத்திடம் கோருகின்றோம். மேலும், காணாமற்போனவர்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் நியமித்த பல ஆணைக்குழுக்கள் தோல்வியில் முடிந்துள்ளன என்பதுடன் இவை காணாமற்போனவர்களுக்கு நீதியினை வழங்குவதற்கோ அல்லது எதிர்காலத்தில் காணமற்போதல்களைத் தடுப்பதற்கோ எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

பெண்கள் மற்றும் சிறுமிகளின் மனித உரிமைகளைப் பாதுகாத்து மதிக்கின்ற, மேலும் அவை அரசியல் அமைப்பு, தேர்தல் முறைமை, பொலிஸ் மற்றும் நீதித் துறையுடன் தொடர்புறுவதனால் அவற்றினை உறுதிப்படுத்துமாறும், உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அரசினைக் கோரும் உறுப்புரை UNSCR 1325இனை நாம் வலியுறுத்துகின்றோம். மானுடத்திற்கெதிரான குற்றச்செயல்களில் பின்வருவன உள்ளடங்குவதாக ரோம நியதிச் சட்டத்தின் 7ஆம் உறுப்புரை வரையறை செய்கின்றது. f - சித்திரவதை, g - பாலியல் வல்லுறவு, பாலியல் அடிமைத்தனம், வலிந்து மேற்கொள்ளப்படும் பாலியல் தொழில், வலிந்து மேற்கொள்ளப்படும் கர்ப்பம், வலிந்து மேற்கொள்ளப்படும் கர்ப்பத்தடை அல்லது ஏனைய வடிவிலான பாலியல் வன்முறைகள், i. வலிந்து நபர்களை காணமற்போகச் செய்தல் இதனடிப்படையில் குற்றச்சாட்டுகள் இல்லாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்லது தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு எதிராகச் சாட்சியங்கள் இல்லாத, அரசிடம் சாட்சியங்கள் இல்லாத அனைவரையும் விடுவிப்பதற்கு இலங்கை அரசினைக் கோருமாறு பெண்களின் நிலை பற்றிய ஆணைக்குழுவிடம் நாம் தயவாக வேண்டுகின்றோம். மேலும், தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பட்டியலை வெளியிடுமாறும், காணாமற்போன தமது கணவர்மார், தந்தைமாரினை காணாமற்போனவர்களின் பெண் உறவினர்கள் அணுகுவதற்கான ஒரு முறைமையினை வழங்குமாறும் இழந்தவர்கள் அல்லது காணாமற்போனவர்களுக்காகத் துயருறுவதற்காக இந்தப் பெண்களுக்கு ஒரு அவகாசத்தினை வழங்குமாறும் ஆணைக்குழுவைக் கோருமாறு நாம் தயவாக வேண்டுகின்றோம். வேண்டுமென்று தவறுதலாகக் கைதுசெய்யப்பட்டு தற்பொழுது தொடர்ச்சியான துன்புறுத்தலுக்குள்ளாகி வருவோர் மற்றும் அரசாங்கத்தின் நேரடி ஆதரவுடன் காணாமற் போகச் செய்யப்பட்டோர் ஆகியோருக்காக நட்டஈட்டினைச் செலுத்துமாறு இலங்கை அரசைக் கோருமாறு நாம் ஆணைக்குழுவை தயவாக வேண்டுகின்றோம்.

***பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு***

# சந்தா விண்ணப்பப் படிவம் 2012

பெயர்/அமைப்பு : ..................................................................

முகவரி : ..................................................................


..................................................................

..................................................................

தொலைபேசி இல : ..................................................................

கையொப்பம் : ..................................................................

திகதி : ..................................................................




## கோசம்...

**ஓராண்டுக்கான சந்தா**

(இலங்கை ரூபா 300 | இந்திய ரூபா 350)

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி Women Action Network, 8/3, 202 , W.A. Silva Mawathe, Colombo 06, Sri Lanka.
Email: tmwn2010@gmail.com


# சந்தா விண்ணப்பப் படிவம் 2012

பெயர்/அமைப்பு : ..................................................................

முகவரி : ..................................................................


..................................................................

..................................................................

தொலைபேசி இல : ..................................................................

கையொப்பம் : ..................................................................

திகதி : ..................................................................



## கோசம்...

**ஓராண்டுக்கான சந்தா**

(இலங்கை ரூபா 300 | இந்திய ரூபா 350)

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி Women Action Network, 8/3, 202 , W.A. Silva Mawathe, Colombo 06, Sri Lanka.
Email: tmwn2010@gmail.com

**Women's Action Network**
8/3 - 202, W.A. Silva Mawathe,
Colombo 06, Sri Lanka.
e-mail: tmwn2010@gmail.com

விலை ரூபா 25.00